بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11 — இதழ் 36

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1448 - ரபீயுல் அவ்வல் 20

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - இகா 03 ★ 03 செப்டம்பர் 2026

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا هَلۡ اَدُلُّكُمۡ عَلٰى تِجَارَةٍ تُنۡجِيۡكُمۡ مِّنۡ عَذَابٍ اَلِيۡمٍ۔ تُؤۡمِنُوۡنَ بِاللّٰهِ وَ رَسُوۡلِهٖ وَ تُجَاهِدُوۡنَ فِىۡ سَبِيۡلِ اللّٰهِ بِاَمۡوَالِكُمۡ وَ اَنۡفُسِكُمۡ‌ؕ ذٰلِكُمۡ خَيۡرٌ لَّـكُمۡ اِنۡ كُنۡتُمۡ تَعۡلَمُوۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! வேதனையளிக்கக் கூடிய தண்டனையிலிருந்து உங்களைக் காப்பாற்றும் வாணிபம் ஒன்றைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூதரிடத்தும் நம்பிக்கை கொண்டு உங்கள் பொருள்களையும், உங்கள் உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் வழியில் உழைப்பதே ஆகும். (சூரா அஸ்ஸஃப் : 11,12)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி — தனது நஃப்ஸுடன் போராடுபவரே உண்மையான போராளி ஆவார்

فَضَالَةَ بْنَ عُبَيْدٍ يُحَدِّثُ، عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ قَالَ:
" كُلُّ مَيِّتٍ يُخْتَمُ عَلَى عَمَلِهِ إِلَّا الَّذِي مَاتَ مُرَابِطًا فِي سَبِيلِ اللَّهِ،
فَإِنَّهُ يُنْمَى لَهُ عَمَلُهُ إِلَى يَوْمِ الْقِيَامَةِ، وَيَأْمَنُ مِنْ فِتْنَةِ الْقَبْرِ "
، وَسَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ:
" الْمُجَاهِدُ مَنْ جَاهَدَ نَفْسَهُ ۔

[سنن ترمذی/ کتاب فضائل الجهاد عن رسول الله صلى الله عليه وسلم/حدیث: 1621]

ஃபஸாலா பின் உபைது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் வழியில் எல்லைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிலையில் மரணிப்பவரைத் தவிர, மற்ற அனைத்து மரணித்தவர்களின் அமல்களின் தொடரும் மூடப்பட்டுவிடுகிறது.

ஆக, அவரது செயல் மறுமை நாள் வரை நீட்டிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்; மேலும் அவர் மண்ணறையின் வேதனையிலிருந்து பாதுகாப்பாக இருப்பார். மேலும், நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை இவ்வாறும் கூறக் கேட்டேன்: தனது நஃப்ஸுடன் போராடுபவரே ‘உண்மையான முஜாஹித் ஆவார்.

عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ رَجَعَ مِنْ بَعْضِ غَزَوَاتِهِ
فَقَالَ رَجَعْنَا مِنَ الْجِهَادِ الْأَصْغَرِ إِلَى الْجِهَادِ الْأَكْبَرِ
قِيلَ يَا رَسُولَ اللّٰهِ وَمَا الْجِهَادُ الْأَكْبَرُ قَالَ وَهِيَ مُجَاهِدَةُ النَّفْسِ-

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு போரிலிருந்து திரும்பி வரும்போது கூறினார்கள்: ‘நாம் அனைவரும் சிறிய ஜிஹாதிலிருந்து அதாவது போரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கின்றோம். மேலும் எல்லாவற்றையும் விட பெரிய ஜிஹாதை நோக்கி அதாவது (ஜிஹாதே கபீர் எனும்) நஃப்ஸுடன் செய்யும் போராட்டத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கின்றோம்.(ரத்துல் முக்தார் அலத் தாரில் முக்தாரிஜ்,பக்கம் 235)

* * * * * * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள் — மனத் தூய்மை பெற மன இச்சைகளுடன் போராடுவது அவசியமாகும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பணிவின் நிலை என்பது ஈமானிற்கு விதையைப் போன்றதாகும். பின்னர் வீணான காரியங்களைக் கைவிடுவதன் மூலம் ஈமான் எனும் செடி தனது மென்மையான தளிர்களைத் துளிர்க்கின்றது. அடுத்து, தனது செல்வத்தை ஸக்காத்தாக கொடுப்பதால் ஈமானிய கிளைகள் துளிர்க்க தொடங்குகின்றன. அவை அதனை ஓரளவிற்கு வலுப்படுத்துகின்றன.பின்னர் நஃப்ஸானிய இச்சைகளை எதிர்த்துப் போராடுவதன் மூலம் அந்தக் கிளைகளில் நல்ல உறுதியும், பலமும் உருவாகி விடுகின்றது. அடுத்து, தன் வாக்குறுதிகளையும், அமானிதங்களின் அனைத்துக் கிளைகளையும் பாதுகாப்பதன் மூலம், அந்த ஈமானிய மரமானது உறுதியான மரமாக நிமிர்ந்து நிற்கிறது. பின்னர் கனிகள் தரும் காலம் வரும்போது, மற்றுமொரு ஆற்றலின் பலன் அதன் மீது வெளிப்படுகிறது. ஏனெனில், அந்த ஆற்றலுக்கு முன்னர் மரத்தில் பழங்களும் காய்க்க முடியாது; பூக்களும் பூக்க முடியாது.‘ (ஸமீமா பரஹீனே அஹ்மதிய்யா, பாகம் 5, ரூஹானீ கஸாயீன், தொகுதி 21, பக்கம் 209, அடிக்குறிப்பு)

வல்ல இறைவன் எந்த நோக்கத்திற்காக இந்த ஜமாஅத்தை உருவாக்க விரும்பினானோ, அந்த நோக்கம் இதுவேயாகும். அதாவது, உலகிலிருந்து அழிந்துபோன அந்த உண்மையான ஞானத்தையும், மேலும் இக்காலத்தில் காணப்படாத அந்த உண்மையான இறையச்சத்தையும், தூய்மையையும் மீண்டும் உலகில் நிலைநாட்டுவதாகும்.‘ (மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 213 -214)

* * * * * * * * * * *

## தஃப்ஸீரே கபீர் — மனதைத் தூய்மைப்படுத்தும் பணி என்பது எந்தவொரு மனிதனின் சுய சக்திக்கும் உட்பட்டதல்ல

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனதைத் தூய்மைப்படுத்தும் பணி என்பது எந்தவொரு மனிதனின் சுய சக்திக்கும் உட்பட்டதல்ல என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். இறுதியில், பெற்றோர்களை விட (பிள்ளைகளை) நேசிக்கக் கூடியவர் வேறு யார் இருக்க முடியும்? ஆனால், அவர்களும் கூட தமது பிள்ளைகளின் மனங்களை தூய்மைப்படுத்த முடியாது.மனதைத் தூய்மைப்படுத்துவதற்கு இரண்டு விஷயங்கள் மிக அவசியமாகும். **முதலாவது, பாவங்களிலிருந்து தவிர்ந்திருத்தல். இரண்டாவது, ஆன்மிகத்தில் முன்னேற்றம் அடைதல்.**

பாவங்களை கைவிடுவது குறித்துக் கூறினார்கள்: நாம் உங்களுக்கு வழங்கும் போதனை என்னவென்றால், ஒவ்வொரு பொருளும் அல்லாஹ்விற்குரியதாகும்; மேலும், வானம், பூமி மற்றும் அண்டங்களின் ஒவ்வோர் அணுவும் இவை அனைத்தும் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தே இருக்கின்றன. எனவே அவன் எந்த விஷயத்தை எடுப்பதற்கு அனுமதிப்பானோ அதை மட்டுமே நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்; மேலும், எதிலிருந்து தடுப்பானோ அதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். ஏனெனில், எஜமானனின் அனுமதியின்றி ஒன்றை பயன்படுத்தக் கூடியவர் தண்டனைக்குரியவராக இருக்கின்றார்.

**இரண்டாவது அம்சம்**, ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவதாகும். அதைக் குறித்து இறைவன் கூறியுள்ளான்: அனைத்தும் எம்முடையதாகும்; மேலும் எம் மூலமாக மட்டுமே எல்லா வகையான நன்மையும், பரக்கத்தும் கிடைக்க முடியும். எனவே நீங்கள் எமது கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது, பின்னர் நாம் உங்களை எமது பாவமன்னிப்பிற்கான நிழலில் சேர்த்துக் கொள்வோம்; எமது வலிமை வாய்ந்த ஆதிக்கம் உங்களை எமது நெருக்கத்தில் கொண்டு சேர்த்து விடும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 3, பக்கம் 531, யூ.கே பதிப்பு)

* * * * * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# அன்பிற்குரிய தாய்நாட்டிற்கு ’சமாதானத் தூதுக்கான ’ தேவை உள்ளது!

**சு**தந்திரத்திற்குப் பிறகு நமது ஒவ்வோர் அடியும் எதிர் வரும் சவால்களை நோக்கி நகர்ந்துக் கொண்டிருக்கிறது. முன்னெப்போதையும் விட இப்போது தேச ஒற்றுமைக்கான அவசியம் நமக்கு அதிகரித்து வருகிறது என்பதைச் சூழ்நிலைகளும்,நிகழ்வுகளும் வெளிப்படுத்துகின்றன. இந்திய தேசம் என்பது பல்வேறு மதங்கள், சமூகங்கள், இனங்கள் மற்றும் சாதிகளைக் கொண்ட ஓர் அழகான மலர்க் கொத்தாகும். இதில் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு எனும் மலர் மலர்ந்தால், அவற்றின் நறுமணம் உள்ளத்தையும், மூளையையும் புத்துணர்ச்சியாக்கும். ஆனால், இந்த பன்முகத்தன்மையை கருத்து வேறுபாடு மற்றும் பிரிவினையின் பக்கம் இட்டுச் சென்றால் பின்னர் நாலா புறமும் துர்நாற்றம் பரவி விடும். வெறும் அந்த துர்நாற்றத்தை மட்டும் அல்ல மாறாக,வேதனை தரும் துர்நாற்றத்தை நாம் அனுதினமும் உணர்கிறோம்.

தங்களின் சுயநலத்திற்காக மதத்தை தவறாகப் பயன்படுத்துவதும், இனங்கள் மற்றும் சாதிகளின் பிரிவினையை வைத்து விளையாடும் கொடூரமான விளையாட்டும், பாரதத்தை ஓர் ஆபத்தான புதைக் குழியை நோக்கித் தள்ளுகிறது. சமூக ஊடகங்களை ஆராய்ந்தால், பரஸ்பர நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையைப் பற்றிப் பேசுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்பதை அறிய முடிகிறது. ஒவ்வொரு பிரிவிலும், மதத்திலும் வெறுப்பைப் பரப்புகின்ற பேச்சுகளில் மும்முரமாக இருக்கும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வெறுப்பு, கருத்து வேறுபாடு மற்றும் சண்டைகளால் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டும் இழப்பு ஏற்படுவதில்லை; மாறாக அனைத்துச் சமூகங்களும் இதனால் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக ஏழைகளும் நலிவடைந்த பிரிவினரும் தான் கொடுமையின் அரைவைக்கல்லில் அதிகம் நசுக்கப்படுகிறார்கள். மேலும், இந்த அக்கிரமத்தின் சுழற்சி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் சாஹிப் அவர்கள் சமீபத்தில் நிகழ்ந்த இந்தியா பாகிஸ்தான் போரின் நாட்களில், 9 மே 2025 அன்று ஜுமுஆ பேருரை வழங்கியிருந்தார்கள். அதில், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனரும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் சமாதானத் தூது என்ற மகத்துவ மிக்க சொற்பொழிவின் பக்கம் நாட்டு மக்களுக்கு கவனமூட்டுங்கள் என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்தியாவில் உள்ள அஹ்மதிகளுக்கு வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். மேலும், கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இன்றிலிருந்து சுமார் 125 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய மக்கள் அனைவரையும் ஒற்றுமை,நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டின் பால் அழைத்தார்கள். மேலும் அன்பு மற்றும் நேசத்தால் நிறைந்த வேதனை மிக்க அறிவுரையை வழங்கினார்கள். அந்த அறிவுரை இன்றும் ஒவ்வோர் இந்தியரையும் செயல்பட அழைக்கிறது.

ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்ஷா அல்லாஹ் அஹ்மதிகளாகிய நாம் இதைத் தத்தமது சொந்த மொழிகளில் அதிகமாகப் பரப்புவோம் என்ற இந்த எதிர்பார்ப்புடன் அதன் சில பகுதிகள் இங்கே சமர்ப்பிக்கப்படுகின்றன:

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

வாசகர்களே! நாம் அனைவரும் - முஸ்லிம்களாகட்டும்! இந்துக்களாகட்டும்! நூற்றுக்கணக்கான கருத்துவேறுபாடுகளுக்கு மத்தியிலும் - இந்த உலகத்தைப் படைத்தவனும், எஜமானனுமான அந்த இறைவன் மீதான நம்பிக்கையில் பங்காளிகளாக இருக்கிறோம். அதேபோன்று அனைவரும் மனிதர் என்று பெயரில் ஒன்றுபட்டுள்ளோம். அதாவது நாம் அனைவரும் மனிதர்கள் என்று அழைக்கப்படுகிறோம்.அதேபோன்று ஒரே நாட்டின் குடிமக்களாக இருப்பதால் நாம் ஒருவருக்கொருவர் அண்டை வீட்டாராக இருக்கிறோம். எனவே, தூய மனதுடனும், நல்லெண்ணத்துடனும் நாம் ஒருவருக்கொருவர் தோழர்களாக ஆகிவிட வேண்டும்; மார்க்க மற்றும் உலகியல் இன்னல்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து, அனுதாபம் கொள்ள வேண்டும்.

எனது நாட்டு மக்களே! எந்த மதத்தில் பொதுவான அனுதாப உணர்விற்கான போதனை இல்லையோ அது மதமே அல்ல. நம்முடைய இறைவன் எந்தவொரு சமுதாயத்திடமும் பாகுபாடு காட்டவில்லை. உதாரணமாக, மனித ஆற்றல்களும், திறன்களும் ஆரிய இனத்தின் பழமையான சமூகங்களுக்கு வழங்கப்பட்டது போல, அரேபியர்கள், பாரசீகர்கள், சிரியர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்கள் மற்றும் அமெரிக்க சமூகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இறைவனின் பூமி அனைவருக்கும் விரிப்பாகச் செயல்படுகிறது; அவனது சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அனைவருக்கும் வெளிச்சம் தரும் விளக்குகளாகச் செயல்படுகின்றன.மேலும், அவை இன்னும் பல தொண்டுகளை ஆற்றுகின்றன. மேலும், அவன் படைத்த பொருட்கள் அதாவது காற்று, நீர், நெருப்பு, மண் அதே போன்று அவன் படைத்த இன்னும் பல பொருட்கள் அதாவது தானியங்கள், பழங்கள், மருந்துகள் போன்றவற்றால் அனைத்துச் சமூகங்களும் பயனடைகின்றன. எனவே, நாமும் நமது சக மனிதர்களிடம் தாராள மனப்பான்மையுடனும், நற்பண்புகளுடனும் நடந்து கொள்ள வேண்டும்; மேலும், குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாக மாறக் கூடாது என்பதை இறைப் பண்புகள் நமக்குக் கற்பிக்கின்றன.

நண்பர்களே! நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். நம் இரு சமூகங்களில் எந்தச் சமூகமும் இறைவனின் பண்புகளுக்கு மரியாதை செலுத்தவில்லையோ, மேலும் அவனது பரிசுத்தமான படைப்புகளுக்கு எதிராகத் தன் நடத்தையை அமைத்துக் கொள்கிறதோ, அந்தச் சமூகம் விரைவில் அழிந்துபோய் விடும். அது தன்னை மட்டுமல்ல, தன் சந்ததியையும் அழிவில் ஆழ்த்தி விடும்.‘

இந்த விஷயம் எந்தவொரு விவாதமும் இன்றி ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாகும். அதாவது, அந்த உண்மையான மற்றும் முழுமையான இறைவன் மீது நம்பிக்கை கொள்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். அவன் அகிலங்களின் ரப்பாக இருக்கிறான். அவனது ருபூபிய்யத் எனும் பண்பானது எந்தவொரு குறிப்பிட்ட சமூகத்துக்கோ, குறிப்பிட்ட காலத்துக்கோ அல்லது குறிப்பிட்ட நாட்டிற்கோ மட்டும் வரையறுக்கப்பட்டது அல்ல. மாறாக, அவன் அனைத்துச் சமூகங்களின் இறைவன் ஆவான். அனைத்துக் காலங்களுக்கும் இறைவன் ஆவான். மேலும் அனைத்து இடங்களின் இறைவன் ஆவான்; அவன் அனைத்து நாடுகளின் ரப் ஆவான். அவனே அனைத்து நன்மைகளின் ஊற்றுக்கண் ஆவான்; அனைத்து பௌதீக மற்றும் ஆன்மிக ஆற்றலும் அவனிடமிருந்தே பெறப்படுகின்றன; அவன்தான் அனைத்துப் படைப்புகளையும் பராமரிக்கின்றன் மேலும், ஒவ்வொரு படைப்பிற்கும் அவனே உதவுபவனாக இருக்கின்றான்.

இறைவனின் அருட்கொடையானது பொதுவானதாகும். அது அனைத்துச் சமூகங்களையும், அனைத்து நாடுகளையும், அனைத்துக் காலங்களையும் சூழ்ந்துள்ளது. ’இறைவன் இன்னாருக்கு அருளினான்; எங்களுக்கு அருளவில்லை’ என்று எந்தவொரு சமூகமுத்திற்கும் குறை கூற வாய்ப்பு கிடைக்க முடியாத வண்ணம் இது இவ்வாறு அமைந்துள்ளது. எனவே, இறைவனின் பண்புகள் இவ்வாறாக இருக்கும்போது, நாமும் அவனது பண்புகளைப் பின்பற்றுவதே நமக்கு ஏற்றதாகும்.

எனவே, எனது தாய்நாட்டு சகோதரர்களே! சமாதானத் தூது என்ற பெயர் கொண்ட அந்தச் சிறிய நூல் மிகுந்த கண்ணியத்துடன் உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், எல்லாம் வல்ல இறைவன் உங்களின் இருதயங்களில் தாமே தூண்டுதலை ஏற்படுத்தட்டும்! என்றும், மேலும் எமது அனுதாபத்தின் ரகசியத்தை அவன் உங்கள் இதயங்களுக்கு வெளிப்படுத்தட்டும்! என்றும் உளமாற துஆ செய்யப்படுகிறது. அதனால் நீங்கள் இந்த தோழமைப் பரிசை ஏதேனும் சுயநல நோக்கத்தின் அடிப்படையிலானது என்று கருத மாட்டீர்கள்.

அன்பிற்குரியவர்களே! மறுமையின் விவகாரம் பொதுமக்களுக்குப் பெரும்பாலும் மறைவாகவே இருக்கிறது. இறப்பதற்கு முன் இறப்பவர்களுக்கே அந்த மறுமை உலகின் ரகசியம் வெளிப்படுகிறது. ஆனால், உலகத்தின் நன்மையையும், தீமையையும் தொலைநோக்கு சிந்தனை படைத்த ஒவ்வொரு நபரும் அடையாளம் காண முடியும்.

ஒற்றுமை என்பது எத்தகைய விஷயம் என்றால், எந்த வழிமுறையாலும் அகற்ற முடியாத அந்தத் துயரங்களையும், எந்தத் திட்டங்களாலும் தீர்க்க முடியாத அந்தக் கடினங்களையும் ஒற்றுமையால் தீர்க்க முடியும். இந்த விஷயம் எவரிடமிருந்தும் மறைவானதல்ல. எனவே, ஒற்றுமையின் அருள்களில் இருந்து தன்னைத் தானே விலக்கி வைத்துக் கொள்வது ஓர் அறிவுடையவருக்கு அழகல்ல.

இந்துக்களும், முஸ்லிம்களும் இந்நாட்டில் வாழும் எத்தகைய இரு சமூகங்கள் என்றால், ஒரு காலத்தில் இந்துக்கள் அனைவரும் ஒன்று திரண்டு முஸ்லிம்களை இந்நாட்டை விட்டு வெளியேற்றி விடுவார்கள் என்றோ, அல்லது முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று திரண்டு இந்துக்களை வெளியேற்றி விடுவார்கள் என்று கற்பனை செய்வது கூட சாத்தியமற்றதாகும். மாறாக, இப்போது இந்துக்களும், முஸ்லிம்களும் பிரிக்க முடியாதவாறு ஒருவரோடு ஒருவர் பிணைக்கப்பட்டுள்ளனர். இருவரில் ஒருவருக்கு ஏதேனும் அழிவு ஏற்பட்டால், அதில் மற்றவரும் பங்காளியாகிவிடுவார். மேலும், ஒரு சமூகம் மற்ற சமூகத்தை வெறும் சுயநலச் செருக்கினாலும், தற்பெருமையினாலும் இழிவாகக் கருத விரும்பினால், பின்னர் அதுவும் அவமானத்தின் கறையிலிருந்து தப்ப முடியாது. அவர்களில் எவரேனும் தன் அண்டை வீட்டாருக்கு அனுதாபம் காட்டுவதில் தவறிவிட்டால், அதன் இழப்பை அவரும் சுயமே சந்திக்க நேரிடும். உங்கள் இரு சமூகங்களில் இருந்து யார் மற்றொரு சமூகத்தின் அழிவிற்கான எண்ணம் கொள்கிறாரோ, அவரின் உதாரணம் அந்த நபரின் உதாரணமாகும். அதாவது, அத்தகைய நபர், ஒரு மரக் கிளையில் அமர்ந்து கொண்டு அதனையே வெட்டுபவரைப் போன்றவர் ஆவார்.

அல்லாஹ்வின் அருளால் நீங்கள் கல்வி கற்றவர்களாகவும் ஆகிவிட்டீர்கள். இப்போது பகைமையை விடுத்து அன்பில் முன்னேறுவது உகந்ததாகும்; மேலும் இரக்கமின்மையை விடுத்து அனுதாபத்தைக் கைக்கொள்வதே உங்கள் புத்திசாலித்தனத்திற்கு உகந்த நிலையாகும்.

உலகத்தின் சிரமங்களும் ஒரு பாலைவனப் பயணமாகும். அதாவது, பெரும் வெப்பம் மற்றும் உச்சி வெயிலின் போது செய்யப்படும்

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

## நன்றியுணர்வு தொடர்பான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியும் துஆக்களும் மற்றும் பொன்னான அறிவுரைகளும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஜுலை 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **வஃபா** மாதம் **17 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

அல்லாஹ் தஆலா மனிதனைப் படைத்தான். எனவே, அதற்கு முன்னரே அவனுடைய நலனுக்காக எண்ணற்ற அருட்கொடைகளைப் படைத்தான். அல்லாஹ்வின் இந்த அருளும், அடியார்களுடனான இந்த நடத்தையும், அடியான் அவனுக்கு நன்றி செலுத்துபவனாக இருக்க வேண்டும் என்பதை நிச்சயமாகக் கோருகிறது.

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அடியார்களாக இருங்கள்‘ என்று ஒவ்வொரு நபியும் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அறிவுறுத்தினார்கள். மேலும், அனைவரையும் விட நம் தலைவரும், வழிகாட்டியுமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இந்த நன்றியுணர்வுக்கான முன்மாதிரியை வெளிப்படுத்தினார்கள். தமது ஒவ்வொரு செயலின் மூலமும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதை வெளிப்படுத்தினார்கள். அன்னாரின் அழுகை, மற்றும் அல்லாஹ்வின் முன்னிலையில் மிகுந்த உருக்கத்துடன் மன்றாடுதல் ஆகியவற்றைக் கண்டு, ‘அல்லாஹ் தங்களிடமோ அனைத்து விதமான வெற்றிகளையும் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளான்; மேலும் தங்களுக்கு வெற்றிகளையும் வழங்கி வருகிறான்; அப்படியிருக்க இவ்வளவு அழுகையும் மன்றாடலும் எதற்கு?‘ என்று அன்னாரிடம் கேட்கப்பட்டபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

இந்த அருட்கொடைகளுக்காக நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அடியானாக ஆக வேண்டாமா? பணிவோடு அவனது சன்னிதானத்தில் சிரம்பணிந்து அவனுக்கு நன்றி செலுத்தக் கூடாதா?‘

(ஸஹீஹுல்-புஹாரி, கிதாபுத்-தஃப்ஸீர், ‘லியஃஃபிர லக்கல்லாஹு மா தகத்தம மின் தன்பிக‘ என்ற இறை வசனத்தின் அத்தியாயம், ஹதீஸ் 4837, மொழிபெயர்ப்புத் தொகுதி 12, பக்கம் 83, நஷ்ரோ இஷாஅத் வெளியீடு)

எங்கு அன்னார் (ஸல்) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது நன்றியுணர்விற்கான செயல் முன்மாதிரிகளை வெளிப்படுத்தினார்களோ அங்கு அன்னார் (ஸல்) தமது சமுதாயத்திற்கும் நன்றியுணர்விற்கான அறிவுரை நல்கினார்கள். மேலும் அதற்கான வழிமுறையை கற்றுக் கொடுத்தார்கள். அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதற்கான துஆக்களைக் கற்றுக் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இதே முன்மாதரி, துஆக்கள் மற்றும் அறிவுரைகளை இன்று நான் எடுத்துரைப்பேன்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஈமான் என்பது இரண்டு பகுதிகளில் அடங்கியுள்ளது. பாதி பொறுமையிலும், பாதி நன்றியிலும் உள்ளது. (அல் ஜாமிஉ லி ஷுஅபுல் ஈமான், தொகுதி 12, பக்கம் 192 - 193, ஹதீஸ் எண்: 9264, மக்தபத்துர் ருஷ்த், 2003-ம் ஆண்டு)

உண்மையில், பொறுமையும் நன்றியுணர்வின் அம்சத்தையே தெளிவுபடுத்துகிறது. எனவே சீர்தூக்கிப் பார்த்தாலோ, உண்மையில் இந்த நன்றியுணர்வின் மூலமாகவே ஈமான் முழுமை பெறுகிறது.

ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நம்பிக்கையாளரின் விவகாரமும் விநோதமானதாகும். அவரது விவகாரம் முற்றிலும் நன்மையானதாகும். மேலும், இது நம்பிக்கையாளரைத் தவிர வேறு எவருக்குமானதன்று. அவருக்கு ஏதேனும் நன்மை கிடைக்குமென்றால், அவர் நன்றி செலுத்துவார். மேலும் இது அவருக்கு நன்மையானதாகும். ஒருவேளை அவருக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால், அவர் பொறுமை செய்வார்; இதுவும் அவருக்கு நன்மையானதாகும். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸஹ்ராத் வர் ரகாயிக், ஹதீஸ் எண்: 5304, தொகுதி 15, பக்கம் 194, வெளியீடு நூர் ஃபவுண்டேஷன்)

நன்மை எதனால் என்றால், அல்லாஹ் கூறுகின்றான்: اِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ ۝١٥٤

நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (அல் பக்கரா: 154)

அடுத்து, அல்லாஹ் கூறினான்: .

وَبَشِّرِ الصّٰبِرِيْنَ ۝١٥٦

பொறுமையாளர்களுக்கு நற்செய்தி கூறுவீராக! (அல்பக்கரா: 156)

எனவே எவருடன் அல்லாஹ் தஆலா இருக்கின்றானோ மேலும், எவருக்கு அல்லாஹ் நற்செய்தி வழங்குகின்றானோ அவருக்கு இதை விட பெரும் நன்மை வேறு என்ன இருக்க முடியும்? மனிதன் வல்ல இறைவனின் அனைத்து அருட்கொடைகளுக்கும் நன்றி செலுத்தக் கூடிய அடியாராக ஆகும்போதுதான் இந்த உண்மையான பொறுமையையும் மேற்கொள்ள முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய வாக்கியத்திலும், சொல்லிலும் நுட்பமான ஞானத்தின் கருவூலம் இருக்கின்றது.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் மக்களுக்கு நன்றி செலுத்துவதில்லையோ அவர் அல்லாஹ்விற்கும் நன்றி செலுத்துவதில்லை. (ஜாமிஉத் திர்மிதி, ஹதீஸ் எண்: 1954)

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது அவசியமாகும். அதே நேரம், மனிதர்களுக்கு நன்றி செலுத்துவதற்கும் அன்னார் (ஸல்) குறிப்பாக கட்டளையிட்டுள்ளர்கள். நன்றி செலுத்துவதற்கான இந்த உணர்வுகளும், எண்ணங்களும் அமைந்தால், சமூகம் ஓர் அழகான தோற்றத்தைப் பிரதிபலிக்கும்; அன்னார் (ஸல்) உருவாக்க விரும்பிய உண்மையான இஸ்லாமிய சமூகமும் இதுவே ஆகும்.

அடுத்து, ஓர் அறிவிப்பில் வருகிறது:

ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிம்பரில் நின்று கூறினார்கள்:

எவர் குறைந்ததற்கு நன்றி செலுத்தவில்லையோ, அவர் அதிகமானதற்கும் நன்றி செலுத்துபவராக இருக்க மாட்டார். மேலும் யார் மக்களுக்கு நன்றி செலுத்தவில்லையோ, அவர் அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்துவதில்லை. அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பற்றிப் பேசுவதும் ஒரு வகையான நன்றியுணர்வாகும்; அதைப் பற்றிப் பேசாமல் இருப்பது நன்றி கேடாகும்.

மேலும் அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஜமாஅத் என்பது அருளாகும்; பிரிவினை என்பது தண்டனையாகும்.‘

(முஸ்னத் இமாம் அஹ்மத் பின் ஹன்பல், தொகுதி 6, பக்கம் 297, ஹதீஸ்: 18640)

ஜமாஅத்துடன் இணைந்திருங்கள்; அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அடியார்களாக இருங்கள்; ஒன்றாக இணைந்திருங்கள்; அப்போதுதான் அல்லாஹ்வின் அருட்கொடைகளில் இருந்து உங்களுக்குப் பங்கு கிடைக்கும். நீங்கள் பிளவை ஏற்படுத்தினால், உங்கள் உள்ளங்கள் பிரிந்திருந்தால், பின்னர் அல்லாஹ்வின் அருள்களுக்கு நீங்கள் வாரிசாக முடியாது.

எந்த அளவிற்கு ஆழமாக அன்னார் (ஸல்) நன்றியுணர்வை போதித்துள்ளார்கள்.

இது தொடர்பாக ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மனிதரைச் சந்திக்கும் போது, ‘நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?‘ என்று கேட்பார்கள். அதற்கு அவர், ‘நான் மிகவும் நலமாக இருக்கிறேன்; அல்லாஹ்வைப் புகழ்கிறேன்‘ என்று கூறுவார். அப்போது, ஹுஸூர் (ஸல்) அவர்கள், ‘அல்லாஹ் உங்களை நல்லபடியாகவே வைத்திருக்கட்டும்! என்று கூறுவார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரைச் சந்தித்தபோது அதே கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு, ‘நான் நன்றி செலுத்தினால் நன்றாக இருப்பேன்‘ என்று அவர் பதிலளித்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாகிவிட்டார்கள். அப்போது

அவர், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! வழக்கமாக தாங்கள் கேட்கும்போது நான் பதிலளித்தால் அந்த துஆவை செய்வீர்கள். அதாவது, நான் 'அல்லாஹ்வைப் புகழ்கிறேன்' என்று சொல்லும்போது, 'அல்லாஹ் உங்களை நலமாக வைக்கட்டும்' என்று துஆ செய்வீர்கள்; ஆனால் இன்று தாங்கள் (ஸல்) அமைதியாகிவிட்டீர்கள்!' என்று கூறினார். ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் உன்னிடம் கேட்கும்போது, 'நான் மிகவும் நன்றாக இருக்கிறேன், அல்லாஹ்வைப் புகழ்கிறேன்' என்று நீ கூறும்போது, 'அல்லாஹ் உன்னை நலமாக வைக்கட்டும்; அல்லாஹ் தனது அருட்கொடைகளிலிருந்து உனக்கு நல்கட்டும்' என்று உனக்காக நான் துஆ செய்வேன். ஆனால், இன்று 'நான் நன்றி செலுத்தினால்.' என்று நீ கூறினாய். ஒருவகையில், நீ சந்தேகத்தில் விழுந்துள்ளீர். அதாவது, நான் நன்றி செலுத்தினால் சரி! அல்ஹம்துலில்லாஹ்; இல்லையென்றால், இல்லை ; 'நான் மிக நன்றாக இருக்கிறேன்' என்று சொல்லுமளவுக்கு என் நிலைமை அவ்வளவு சிறப்பாக இல்லை என்று பொருள்படும்படி நீ கூறினாய். எனவேதான், தாம் அமைதியாகிவிட்டதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்னத் இமாம் அஹ்மது பின் ஹன்பல், முஸ்னத் அனஸ் பின் மாலிக், தொகுதி 4, பக்கம் 618, ஹதீஸ் 13571)

அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'நீர் சந்தேகத்தில் விழுந்துவிட்டீர்; அல்லாஹ்வைப் பற்றி தவறான எண்ணம் கொண்டீர்.

அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் விஷயத்தில் ஒருவருடைய மனதில் சிறிய அளவில் எதிர்மறை எண்ணம் தோன்றுவதை கூட அன்னாரால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யாருக்காவது ஒரு நன்மை செய்யப்பட்டு, அவர் அதைச் செய்தவரிடம் 'ஜஸாகல்லாஹு கைரா' அல்லாஹ் உங்களுக்கு சிறந்த நற்கூலியை வழங்குவானாக! என்று கூறினால், அவர் பாராட்டுதலுக்குரிய உரிமையை நிறைவேற்றிவிட்டார்.' (ஜாமிஉத் திர்மிதி, அப்வாபுல் பிர்ரி வஸ்ஸிலா, பாப் மா ஜாஅ ஃபீ ஸ்ஸனாஇ பில் மஃரூஃப், ஹதீஸ் 2035)

அதேபோல ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் ஒரு சமூகத்திற்கு நன்மையையும், பரக்கத்தையும் வழங்க விரும்பும்போது, அவர்களின் ஆயுளை நீட்டித்து விடுகிறான்; மேலும் அவர்களுக்கு நன்றியுணர்வை 'இல்ஹாம்' செய்கிறான் (அதாவது நன்றி செலுத்துவதற்கான நற்பேற்றை அளிக்கிறான்). (கன்ஸுல் உம்மால், கிதாபுல் அக்லாக், தொகுதி 2, பகுதி 3, பக்கம் 104, ஹதீஸ் 6409)

எனவே சமுதய வளர்ச்சிக்கும் நன்றியுணர்வு அவசியமானதாகும். ஜமாஅத்தின் வளர்ச்சிக்கும் நன்றியுணர்வு அவசியமாகும். தனிநபர் வளர்ச்சிக்கும் நன்றியுணர்வு அவசியமாகும். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது, பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு நன்றி செலுத்துவது மற்றும் எந்தவொரு நபரிடமிருந்தாவது ஏதேனும் நன்மை கிடைத்தால் அவருக்கு நன்றி செலுத்துவது ஆகியவை மிகவும் அத்தியாவசியமானவையாகும்; மேலும் இதுவே சமுதாய ஒற்றுமைக்கு காரணியாக அமைகிறது.

பிறகு, ஓர் அறிவிப்பில் நன்றியுணர்வைப் பற்றிய சரியான புரிதலை ஏற்படுத்துவதற்காக அன்னார் (ஸல்) அருமையான அறிவுரை வழங்கியுள்ளார்கள். அது இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அடிக்கடி என்னிடம், 'உன்னுடைய கவிதைகளுக்கு என்ன ஆயிற்று?'

அதாவது ஏதாவது கவிதை சொல் என்று கூறுவார்கள்.'

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்குக் கவிதைகள் நினைவிருந்தன. அன்னார் (ரலி) கவிதைகள் கூறிவந்தார்கள்.

எனவே, 'எந்தக் கவிதைகள்?' என்று நான் கேட்டேன். 'எனக்கு ஏராளமான கவிதைகள் நினைவிருக்கின்றன.' 'நன்றி செலுத்துவதைப் பற்றிய கவிதைகளைச் சொல்!' என்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறுவார்கள்.

நான், 'என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்!' என்று கூறிவிட்டுச் சொன்னேன்: 'கவிஞர் கூறுகிறார்:

உனக்கு கைம்மாறு செய்ய முடியாத அந்த பலவீனருக்கு நீ ஆதரவாக இரு. ஒரு நாள் அதன் நற்பலன்கள் வெளிப்படுவதை நீ காண்பாய்.'

வெறும் கைம்மாறை எதிர்பார்த்து மட்டும் ஆதரவாக இருக்க வேண்டாம்; மாறாக, உனக்கு கைம்மாறு செய்ய முடியாதவருக்கும் ஆதரவாக இரு! அதன் பலன்களும் வெளிப்படுவதை நீ காண்பாய்! இதைத்தான் கவிஞர் கூறினார்.

பிறகு, அந்தப் பலவீனமானவன் ஏதேனும் ஒரு நாளில் ஒன்று உனக்கு அதற்குரிய கைம்மாறைச் செய்வார் அல்லது உன்னைப் புகழ்ந்து பேசுவார். மேலும், நீ செய்த அந்த நன்மைக்காக உன்னைப் புகழ்ந்து பேசினால், ஒருவகையில் அவர் அந்த உதவிக்குரிய கைம்மாறைச் செலுத்திவிட்டார். 'அல்ஹம்துலில்லாஹ்;' நன்றி என்று கூறினாலும் அவர் அந்த உதவிக்குரிய கைம்மாறைச் செலுத்திவிட்டார்.'

பிறகு அதே கவிதைகளில் அன்னார் (ரலி) மேலும் எடுத்துரைக்கின்றார்கள்:

கண்ணிய மிக்க ஒருவரிடம் நீ நன்மைகள் செய்து உறவைப் பேண நாடினால், அவருடைய கயிற்றை (தொடர்பை) சிதிலமடைந்ததாகவோ, பலவீனமானதாகவோ நீ காணமாட்டாய்!'

நீ நன்மை செய்து உறவைப் பேணும்போது, ஏதோ பலவீனமான கயிற்றைப் பிடித்திருப்பதாக அர்த்தமில்லை; மாறாக, அது மிக உறுதியான கயிறாகும். ஏனெனில் அல்லாஹ் தஆலா அதற்குரிய நற்கூலியை வழங்குவான்.

> *திருக்குர்ஆனிலிருந்து...*
>
> நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)
>
> A. Nasir Ahmad
> (District Ameer, Melapalayam)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'நான் இந்தக் கவிதைகளைக் கூறியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'ஆயிஷாவே! இது முற்றிலும் சரியானதாகும். ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: அல்லாஹ் தஆலா மறுமை நாளில் படைப்பினங்களை எழுப்பும்போது, என்னுடைய அடியான் ஒருவன் உனக்கு ஒரு நன்மை செய்தானே! நீ அவனுக்கு நன்றி செலுத்தினாயா? என்று தன் அடியார்களில் ஒருவனிடம் கேட்பான். அதற்கு, 'என் இறைவா! இது உன்னிடமிருந்து கிடைத்த நன்மையாகும் என்பதை நான் அறிந்திருந்தேன்; எனவே உனக்கே நான் நன்றி செலுத்தினேன்; அந்த அடியானுக்கு நன்றி செலுத்தவில்லை; ஆனால் உனக்கு நன்றி செலுத்திவிட்டேன்' என்று அவர் பதிலளிப்பார். அதற்கு அல்லாஹ் தஆலா கூறுவான்: எவர் மூலமாக நான் உனக்கு நன்மை செய்தேனோ அவருக்கு நீ நன்றி செலுத்தவில்லை என்றால், பின்னர் நீ எனக்கும் நன்றி செலுத்தவில்லை. (கன்ஸுல் உம்மால், கிதாபுல் அக்லாக், பாகம் 2, பகுதி 3, பக்கம் 297, ஹதீஸ் 8621, தாருல் குதுபில் இல்மிய்யா)

ஓர் அழகிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு இது எவ்வளவு அழகான செயலாகும்!

நன்றி செலுத்துவதற்கான துஆவை கற்றுக் கொடுத்தவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஃகன்னாம் பயாளீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே! நான் காலையை அடையும்போது என்னிடம் உள்ள ஒவ்வோர் அருட்கொடையும் உன்னிடமிருந்து வந்ததாகும்; நீ ஏகன் ஆவாய்; உனக்கு எதுவும் இணையில்லை; எனவே புகழ் அனைத்தும் உனக்கே உரியதாகும்; நன்றியும் உனக்கே உரியதாகும் என்ற இந்த துஆவை யார் காலையை அடையும் போது செய்கிறாரோ, அவர் அன்றைய நாளுக்கான நன்றியைச் செலுத்திவிட்டார். மேலும், யார் மாலையை அடையும் போது இவ்வாறு கூறுகிறாரோ, அவர் அன்றைய இரவிற்கான நன்றியைச் செலுத்திவிட்டார். (ஸுனன் அபூ தாவூத், கிதாபுல் அதப், பாப்: மா யகூலு இதா அஸ்பஹ, ஹதீஸ் 5073)

இதே போல் ஓர் அறிவிப்பு உள்ளது:

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்;

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனது கையைப் பிடித்தார்கள்; மேலும், கூறினார்கள்:

முஆஸே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக நான் உன்னை நேசிக்கிறேன். பிறகு, முஆஸே! ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் பின்வருமாறு கூறுவதை ஒருபோதும் விட்டுவிடாதே என நான் உனக்கு வலியுறுத்துகிறேன்:

**அல்லாஹ்வே! உன்னை நினைவுகூரவும், உனக்கு நன்றி**

**செலுத்தவும், உன்னை அழகிய முறையில் இறை வணக்கம் செய்வதற்கும் எனக்கு உதவி செய்வாயாக!** (ஸுனன் அபூ தாவூத், கிதாபுல் வித்ரு, பாப்: ஃபில் இஸ்திஃக்ஃபார், ஹதீஸ் 1522)

அடுத்து, ஓர் அறிவிப்பில் உள்ளது:

அபூல் அஃலா பின் ஷிஃகையர், பனூ ஹன்ழலாவைச் சேர்ந்த ஒரு நபரிடமிருந்து அறிவிக்கிறார். அவர் கூறினார்:

நான் ஹஸ்ரத் ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தேன். அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்ததை நான் உனக்குக் கற்றுத்தரட்டுமா? நீ இவ்வாறு கூறுவாயாக!:

அல்லாஹ்வே! நான் உன்னிடம் ஒவ்வொரு காரியத்திலும் உறுதியையும், நேர்வழியில் நிலையாக இருப்பதையும் கேட்கிறேன். உன்னுடைய அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதையும், உன்னை அழகிய முறையில் வணங்குவதையும் உன்னிடம் வேண்டுகிறேன். மேலும், உண்மை பேசும் நாவை வேண்டுகிறேன்; தூய்மையான உள்ளத்தின் நிலையில் உன்னிடம் அடைக்கலம் வேண்டுகிறேன். மேலும், நீ அறிந்துள்ள அந்தத் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்; நீ! அறிந்திருக்கும் அந்த நன்மையையும், உனக்குத் தெரிந்தவர்களிடமிருந்தும் உன்னிடம் மன்னிப்பையும் வேண்டுகிறேன்.

அதாவது, அல்லாஹ்விடமிருந்தும், உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதரிடமிருந்தும். மனிதனுக்குப் பயனளிக்கக்கூடிய, மன்னிப்பைப் பெற்றுத் தரக்கூடிய ஒவ்வொரு விஷயத்தையும் (வேண்டுகிறேன்).

நிச்சயமாக நீ! மறைவான விஷயங்களை நன்கறிந்தவன் ஆவாய். (ஜாமிஉத் திர்மிதி, துஆக்கள் பற்றிய அத்தியாயம் துஆ: அல்லாஹூம்ம இன்னீ அஸ்அலுக.ஹதீஸ்: 3407)

ஏனெனில், யார் பயனுள்ளவர் ஆவார்? யார் இல்லை? என்பதை அல்லாஹ் மட்டுமே அறிவான்.

எனவே, அல்லாஹ்வே! நீ படைத்த ஒவ்வொரு பொருளிலும் எனக்கு அருள் புரிவாயாக! மேலும் எனக்குப் பயனுள்ளவற்றுள் நன்மையை அமைத்துத் தருவாயாக! என்று அல்லாஹ்விடம் இந்த துஆவை செய்தார்கள்.

பிறகு, ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு துஆவைக் கற்றுக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் அபூ ஸயீத் (ரலி) அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தொழுகையில் ஓதுவதற்கு மிகச் சிறந்த துஆ எது? என்று ஒரு நபர் கேட்டார். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் இவ்வாறு கூறுங்கள்:

அல்லாஹூம்ம லகல் ஹம்து குல்லுஹூ, வ லகஷ் ஷூக்ரு குல்லுஹூ, வ லகல் முல்க்கு குல்லுஹூ, வ லகல் கல்கு குல்லுஹூ, வ இலைய்க யர்ஜிஉல் அம்ரு குல்லுஹூ, நஸ்அலுக மினல் கைரி குல்லிஹி, வ நவூது பிக மினஷ் ஷர்ரி குல்லிஹி.

அல்லாஹ்வே! அனைத்துப் புகழும் உனக்கே உரியதாகும்; அனைத்து நன்றியும் உனக்கே உரியதாகும்; அனைத்து ஆட்சியும் உனக்கே உரியதாகும்; அனைத்துப் படைப்புகளும் உனக்கே உரியவையாகும்; அனைத்துக் காரியங்களும் உன்னிடமே மீள்கின்றன. நாங்கள் அனைத்து விதமான நன்மைகளையும் உன்னிடம் கேட்கிறோம்; அனைத்து விதமான தீங்குகளிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.

(ஜம்உல் ஜாமிஃ தொகுதி 15, பக்கம் 571 - 572, ஹதீஸ்: 15222, தாருல் குதுபில்-இல்மியா 2016)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த ஒரு துஆவைப் பற்றிக் குறிப்பிடும் ஓர் அறிவிப்பு இவ்வாறு கிடைக்கிறது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது துஆவில் இவ்வாறு கூறுவார்கள். அதன் மொழியாக்கம் இவ்வாறாகும்.

என் இறைவா! எனக்கு உதவுவாயாக! எனக்கு எதிராக எவருக்கும் உதவாதே! எனக்கு வெற்றியை வழங்குவாயாக! மேலும், எனக்கு எதிராக எவருக்கும் வெற்றி தராதே! எனக்கு ஆதரவாகத் திட்டம் தீட்டுவாயாக! எனக்கு எதிராகத் திட்டம் தீட்டாதே! எனக்கு நேர்வழி காட்டுவாயாக! அந்த நேர்வழியை எனக்கு எளிதாக்கித் தருவாயாக! மேலும் எனக்கு எதிராக அநீதி இழைப்பவருக்கு எதிராக எனக்கு உதவி செய்வாயாக!

**அல்லாஹ்வே! என்னை உனக்கு அதிகம் நன்றி செலுத்துபவனாகவும், உன்னை அதிகம் நினைவுகூர்பவனாகவும், உனக்கு அஞ்சுபவனாகவும், உனக்குக் கீழ்ப்படிபவனாகவும், உனக்கு முற்றிலும் அடி பணிபவனாகவும், உன்னளவிலேயே அதிகம் மீளுபவனாகவும் ஆக்குவாயாக!. என் இறைவா! என் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக!, என் பாவத்தைக் கழுவி விடு! என் துஆவை ஏற்றுக் கொள்வாயாக! என் சான்றை உறுதிப்படுத்து! என் உள்ளத்திற்கு நேர்வழி காட்டுவாயாக! என் நாவைச் செம்மைப்படுத்துவாயாக! என் உள்ளத்திலிருந்து பொறாமையையும், வஞ்சகத்தையும் நீக்கிவிடுவயாக!**

(ஸுனன் அபூ தாவூத், கிதாபுல் வித்ர், பாப்: மனிதன் ஸலாம் கொடுத்த பிறகு என்ன சொல்வது? ஹதீஸ்: 1510)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளம் அனைத்து விஷயங்களிலும் தூய்மையானதாகவும், பரிசுத்தமானதாகவும் இருந்தது. மேலும், அல்லாஹ்வின் பக்கம் முற்றிலும் குனிந்து இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆவை தமக்காகச் செய்து வந்தார்கள். ஆயினும், உண்மையில் தம்மை நம்புபவர்கள் தங்களின் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்க இவ்வாறு துஆ செய்ய வேண்டும் என்பதையும், அல்லாஹ்வின் அருளைக் கேட்க வேண்டும் என்பதையும் நமக்கு கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹூரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து மனனம் செய்த ஒரு துஆ உள்ளது. அதை நான் கைவிடுவதில்லை. அந்த துஆ இதுவாகும்:

அல்லாஹ்வே! உனக்கு அதிகம் நன்றி செலுத்துபவனாகவும், உன்னை அதிகமாக நினைவு கூர்பவனாகவும், உனது அறிவுரையைப் பின்பற்றுபவனாகவும், உனது கண்டிப்பான கட்டளைகளை நினைவில் வைப்பவனாகவும் என்னை ஆக்கி விடுவாயாக! (ஜாமிஉத்-திர்மிதி, அப்வாபுத் தஅவாத், பாப்: அல்லாஹூம் மஜ்அல்னீ அஃளம ஷூக்ரிக... ஹதீஸ்: 3604)

ஒரு மனிதன் தினமும் இந்த துஆவைச் செய்தால், பின்னர் அவருக்குத் தவறான எண்ணங்கள் கூட தோன்றாது. தவறான வகையான செயல்களையும் மனிதன் செய்யமாட்டான். அல்லாஹ் எதைச் செய்யக் கட்டளையிட்டுள்ளானோ அதை மட்டுமே அவன் செய்வான்.

ஹஸ்ரத் அபூஹூரைரா (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'சோதனையில் சிக்கிய ஒரு மனிதனை ஒருவர் பார்த்தால், அவர் இந்த துஆவைச் செய்யட்டும்! அவ்வாறு செய்தால் அவர் இந்த அருட்கொடைக்கு நன்றி செலுத்தி விட்டார். மேலும், துஆவின் வார்த்தைகள் இவையாகும்:

எந்த அல்லாஹ் இந்தச் சோதனையிலிருந்து என்னைப் பாதுகாத்தானோ, மேலும் எனக்கு உன் மீதும், தனது முழுப் படைப்பினங்களின் மீதும் எனக்கு மேன்மையை அளித்தானோ அந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியவையாகும். (கிதாபுஷ் ஷூக்ர், இப்னு அபீ துன்யா, பக்கம்: 55, மக்தபத்துத் துராத்துல் இஸ்லாமி, 1994)

துன்பத்தில் இருக்கும் ஒருவரைப் பார்க்கும்போது இந்த துஆவைச் செய்ய வேண்டும். அவன் என்னை இந்தத் துன்பங்களிலிருந்து பாதுகாத்தான்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமக்குப் பிடித்தமான ஒன்றைக் காணும்போது இவ்வாறு கூறுவார்கள்:

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்; அவனது அருளால்தான் அனைத்து நன்மைகளும் முழுமையடைகின்றன.

மேலும், அன்னார் (ஸல்) தமக்குப் பிடிக்காத ஒன்றைக் காணும்போது இவ்வாறு கூறுவார்கள்:

எல்லாச் சூழ்நிலைகளிலும் அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். (நூல்: ஸுனன் இப்னு மாஜா, கிதாபுல் அதப், பாப் ஃபஸ்லுல் ஹாமீதீன், ஹதீஸ்: 3803)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தோம்; அப்போது மழை எங்கள் மீது பொழியத் தொடங்கி விட்டது.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

மழைத் துளி அவர்கள் மீது படும்

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அளவில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது ஆடையைத் தலையிலிருந்து விலக்கினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஏன் இவ்வாறு செய்தீர்கள்?' என்று நாங்கள் கேட்டோம். அதற்கு அன்னார் (ஸல்) கூறினார்கள்:

ஏனெனில், இது உயர்ந்த மேன்மையான இறைவனிடமிருந்து புத்தம் புதிதாக வந்துள்ளது. (நூல்: ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸலாத்தில் இஸ்திஸ்கா, பாப் அத் துஆ ஃபில் இஸ்திஸ்கா, ஹதீஸ்: 1485)

அதற்கு நன்றி செலுத்தும் விதமாகவே நான் அந்த மழைத் துளிகளை பெற்றுள்ளேன்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் அன்னாரின் ஸஹாபிகளும் மேகத்திலிருந்து பொழியும் முதல் மழைத் துளிக்காகத் தங்கள் தலைகளை (துணிகளை) மறைக்காமல் திறந்து வைப்பார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுவார்கள்.

இது நமது கண்ணியமும், கம்பீரமும் மிக்க இறைவனிடமிருந்து வந்துள்ள புதிய அருட்கொடையாகும். மேலும் இது மிகவும் அருளுக்குரியதாகும். (நூல்: கன்ஸுல் உம்மால், பாகம் 1, பகுதி 2, பக்கம் 267, ஹதீஸ்: 4936)

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தாத எந்தவொரு சந்தர்ப்பமும் இருக்கவில்லை. எந்த அளவிற்கு என்றால், வெளிப்படையாக மிக மிகச் சிறியதாகத் தோன்றும் விஷயத்திலும் அன்னார் (ஸல்) நன்றி செலுத்தி வந்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கழிப்பறையிலிருந்து வெளியே வரும்போது இவ்வாறு துஆ செய்வார்கள்:

என்னிடமிருந்து தீங்கிழைக்கும் விஷயத்தை அகற்றி, எனக்கு ஆரோக்கியத்தை வழங்கிய அந்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியவையாகும். (ஸுனன் இப்னு மாஜா, கிதாபுத் தஹாரா, பாப் மா யகூலு இதா கரஜ மினல் கலா, ஹதீஸ் 301)

ஹஸ்ரத் ஸைது பின் காலித் ஜுஹ்னீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரவில் மழை பெய்த பிறகு ஹுதைபிய்யாவில் எங்களுக்கு சுப்ஹ் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகையை முடித்ததும் மக்களை நோக்கி திரும்பி, கண்ணியமும் மகத்துவமும் மிக்க உங்களது இறைவன் என்ன கூறினான் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள்.

'அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கறிவர் என்று மக்கள் கூறினர். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் கூறினான்: எனது அடியார்களில் சிலர் என் மீது நம்பிக்கை கொண்டவர்களாகவும், சிலர் என்னை நிராகரிப்பவர்களாகவும் இன்று காலைப் பொழுதை அடைந்தனர். அல்லாஹ்வின் அருளாலும் அவனது கருணையாலும்தான் நமக்கு மழை பொழிந்தது' என்று கூறியவர் என் மீது நம்பிக்கை கொண்டவர் ஆவார்; நட்சத்திரங்களை வணங்குபவர் நிராகரிப்பாளர் ஆவார். ஆனால், 'இன்ன இன்ன நட்சத்திரத்தின் உதயத்தின் காரணமாக தான் மழை பெய்தது' என்று கூறுபவரோ என்னை நிராகரித்தவர் ஆவார்; மேலும் நட்சத்திரங்களின் மீது நம்பிக்கை கொண்டவர் ஆவார். (ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் அதான், பாப் யஸ்தக்பிலுல் இமாமுன் நாஸ இதா ஸல்லம, ஹதீஸ் 846, தொகுதி 2, பக்கம் 247-248)

அதாவது, இன்னமும் என் மீது இதேபோல் நம்பிக்கை கொள்ளாதவர் நட்சத்திரங்களை வழிபடுபவர் ஆவார். எனவே நன்றியுணர்வின் உண்மையான அளவுகோல் என்னவென்றால், ஒவ்வொரு விஷயத்திலும் வல்ல இறைவனை மட்டுமே புகழ்ந்து, அவனுக்கு நன்றி செலுத்துவதாகும்.

ஏனெனில், அக்காலத்தில் சிலருக்கு இன்னும் முழுமையான தர்பிய்யத் கிடைத்திருக்கவில்லை. பழைய மரபுகளின் தாக்கமும் இருந்தது. அவர்களின் பழைய மரபு வழி மார்க்கத்தின் தாக்கமும் அவர்களின் மீது இருந்தது. எனவே அவர்கள் அவ்வாறு கூறி வந்தார்கள். நட்சத்திரங்கள் போன்றவற்றின் பெயர்களைக் குறிப்பிடுபவர்களாகவும் இருந்தனர். எனவே அன்னார் (ஸல்), அவர்களுக்கு நன்றியுணர்வின் உண்மையை எடுத்துக் கூறி, இவ்வாறு அவர்களுக்கு மார்க்கப் பயிற்சியளித்தார்கள்.

மற்றோர் அறிவிப்பு உள்ளது: ஹஸ்ரத் ஜஃபர் பின் முஹம்மது தம் தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கண்ணாடியைப் பார்க்கும்போது இவ்வாறு கூறி வந்தார்கள்:

என்னைப் படைத்து, என் தோற்றத்தையும் என் நற்பண்புகளையும் அழகாக அமைத்து, பிறரிடம் குறைகளாகத் தெரிபவற்றை என்னிடம் அழகாக ஆக்கிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியது.'(கிதாபுஷ் ஷுக்ர் - இப்னு அபித்துன்யா, பக்கம் 54)

ஹஸ்ரத் அபூ ஸயீத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதையாவது உண்ணும் போதோ அல்லது பருகும்போதோ அதன் பிறகு இறைவனுக்கு இவ்வாறு நன்றி செலுத்தி வந்தார்கள்:

எங்களுக்கு உணவளித்து, தாகத்தைத் தணித்து, எங்களை முஸ்லிம்களாக ஆக்கிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.(ஜாமிஉத் திர்மிதி, துஆக்கள் அத்தியாயம், ஹதீஸ்: 3457)

ஹஸ்ரத் அபூ அமாமா (ரலி) அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உணவருந்தி முடித்ததும் இந்தத் துஆவைக் கூறுவது வழக்கமாக இருந்தது. ஒருமுறை அபூ அமாமா (ரலி) அவர்கள் உணவருந்திய விரிப்பை உயர்த்தியபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

எங்களுக்குப் போதுமானதை அளித்து, எங்கள் தாகத்தைத் தணித்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.

இந்த நன்றியுணர்வு என்று போதுமானது என்று கைவிடப்படுவதோ அல்லது நிராகரிக்கப்படுவதோ அல்ல.

சில சமயங்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறும் கூறுவார்கள்:

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. எங்கள் இறைவா! இங்கேயே உண்பதுடன் முடிந்து விடுவது நன்றி அல்ல ;அடுத்து மீண்டும் செலுத்தப்படாமல் இருப்பதும் நன்றியுணர்வு அல்ல ; போதுமானது என்றோ, புறக்கணிக்கப்படக் கூடியது என்றோ, அல்லது இனி தேவையில்லை என்றோ தவிர்க்கப்படக் கூடியதல்ல, எங்கள் இறைவா! (ஸஹீஹுல் புஹாரி, உணவு பற்றிய அத்தியாயம், ஹதீஸ்: 5459)

நன்றி செலுத்துவதை வலியுறுத்தி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ஸஹ்ல் பின் முஆஸ் பின் அனஸ் (ரலி) தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'எவர் உணவருந்திய பிறகு இந்தத் துஆவை செய்வாரோ அவருடைய முந்தைய மற்றும் பிந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுவிடும்!

எனது எந்த வலிமையும் சக்தியும் இன்றி, எனக்கு இந்த உணவை அளித்து, இதை எனக்கு உணவாக வழங்கிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்!

மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யார் ஆடை அணிந்து, இந்தத் துஆவை செய்வாரோ அவருடைய முந்தைய மற்றும் பிந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்.

எனது எந்தவித ஆற்றலும், சக்தியும் இன்றி, இந்த ஆடையை எனக்கு அணிவித்து, இதை எனக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்!

(ஸுனன் அபூதாவுத், கிதாப் அல்-லிபாஸ், பாப் மா யகூலு இதா லபிஸ... ஹதீஸ்: 4023)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கள் பருவத்தின் முதல் கனியைக் கண்டால், அதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வருவார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதை எடுக்கும் போது இவ்வாறு துஆ செய்வார்கள்:

அல்லாஹ்வே! எங்கள் கனிகளில் எங்களுக்கு பரக்கத் செய்வாயாக! எங்கள் நகரில் எங்களுக்கு பரக்கத் செய்வாயாக! எங்கள் (அளவைக் கருவியான) 'ஸாஃவில் எங்களுக்கு பரக்கத் செய்வாயாக! எங்கள் 'முத்'திலும் (மற்றொரு அளவைக் கருவி) எங்களுக்கு பரக்கத் செய்வாயாக!

அல்லாஹ்வே! நிச்சயமாக இப்ராஹீம் உனது அடியாராகவும், உனது தோழராகவும், உனது நபியாகவும் இருந்தார். நான் உனது அடியாராகவும், உனது நபியாகவும் இருக்கிறேன். அவர் மக்காவிற்காக உன்னிடம் துஆ செய்தார்; அவர் மக்காவிற்காக துஆ செய்ததைப் போன்றே நான் உன்னிடம் மதீனாவிற்காக துஆ செய்கிறேன். மேலும் அவர்



மக்காவிற்காக துஆ செய்தது போன்றே மேலும் அதே போன்று இன்னும் சில துஆக்களை நான் உன்னிடம் மதீனாவிற்காக செய்கிறேன்.'

அறிவிப்பாளர் கூறுகிறார்: பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகச் சிறிய குழந்தையை அழைத்து, அந்தப் பழத்தை அவர்களிடம் கொடுத்து விடுவார்கள். புதிய கனி வரும்போது, அதை முதன்முதலில் குழந்தைகளுக்கே கொடுப்பார்கள். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல்-ஹஜ், பாப் ஃபஸ்லுல் மதீனா..., ஹதீஸ்: 2423, பாகம் 6, பக்கம் 338)

ஹஸ்ரத் ஹுஃஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இரவில் தம் படுக்கையில் படுக்கும்போது, தமது கையைத் தம் கன்னத்தின் கீழ் வைத்துப் பின்வருமாறு துஆ செய்வார்கள்:

அல்லாஹ்வே! உன்னுடைய பெயராலேயே நான் மரணிக்கிறேன்; உயிர்பெறுகிறேன்.

அன்னார் (ஸல்) கண் விழிக்கும்போது இவ்வாறு துஆ செய்வார்கள்:

எங்களை மரணிக்கச் செய்த பின், எங்களுக்கு உயிரளித்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியதாகும்! மேலும் அவனிடமே அனைவரும் மீளுதல் உள்ளது. மேலும் அவன் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டி இருக்கிறது.

(ஸஹீஹ் அல்-புஹாரி, கிதாப் அத்-தஅவாத், அத்தியாயம்: வலது கன்னத்தின் கீழ் கையை வைப்பது, ஹதீஸ் 6314, தொகுதி 15, பக்கம் 27)

மற்றோர் அறிவிப்பில் கண் விழித்தெழும்போது ஓதும் துஆ இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அன்னார் (ஸல்) இரவில் தூங்கி விழிக்கும்போது இவ்வாறு கூறுவார்கள்:

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது; அவன் என்னை மரணிக்கச் செய்த பிறகு எனக்கு உயிரளித்தான், மேலும் அவன் பக்கமே மீண்டும் எழுப்பப்பட்டுச் செல்ல வேண்டியுள்ளது.'

(முஸ்னத் இமாம் அஹ்மத் பின் ஹன்பல், முஸ்னத் ஹுதைஃபா பின் அல்-யமான், தொகுதி 7, பக்கம் 705, ஹதீஸ்: 23675)

அம்ர் பின் ஷுஐப் தம் தந்தையிடமிருந்தும், அவர் தம் தந்தை வழிப் பாட்டனாரிடமிருந்தும் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நிச்சயமாக அல்லாஹ் தனது அடியார்கள் மீது தனது அருட்கொடையின் அடையாளங்கள் தென்படுவதை விரும்புகிறான்.(ஜாமியுத்-திர்மிதி, அப்வாப் அல்-அதாப், ஹதீஸ் 2819)

அல்லாஹ் அளித்த அருட்கொடைகள் மனிதனிடம் தென்பட வேண்டும். இதுவும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதாகும். அவை மனிதனிடம் வெளிப்படவும் வேண்டும்.

இவ்வாறே மற்றோர் அறிவிப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அபூல் அஹ்வஸ் தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அவர் கூறினார்:

நான் நபி (ஸல்) அவர்களிடம் கிழிந்த ஆடைகளில் ஆஜரானேன். அதாவது நல்ல ஆடைகள் இருக்கவில்லை. மிகவும் மோசமான ஆடைகளாக இருந்தன.

அப்போது, அன்னார் (ஸல்), 'உன்னிடம் செல்வம் இருக்கிறதா?' என்று என்னிடம் கேட்டார்கள். அதற்கு, அவர் 'ஆம்!' என்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்: 'எவ்வகையான செல்வம் இருக்கிறது? என்று கேட்டார்கள்.

செல்வந்தராக இருக்கின்றீர்; என்னிடம் செல்வம் உள்ளது என்று நீர் கூறுகின்றீரே;உம்மிடம் எத்தகைய செல்வம் உள்ளது? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அதற்கு, 'அல்லாஹ் எனக்கு ஒட்டகங்களும், ஆடு-மாடுகளையும் வழங்கியுள்ளான். மேலும், குதிரைகளும் என்னிடம் உள்ளன ; மேலும், அடிமைகளையும் அல்லாஹ் வழங்கி இருக்கின்றான். என்னிடம் ஏராளமான செல்வம் உள்ளது' என்று அவர் கூறினார்.

அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் உனக்குச் செல்வத்தை அளித்திருக்கும் போது, அவனுடைய அருட்கொடையும், கண்ணியமும் உன்னிடம் தென்பட வேண்டும். (ஸுனன் அபீ தாவூத், கிதாபுல்-லிபாஸ், ஹதீஸ் 4063)

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அந்த நன்றி செலுத்துதலின் வெளிப்பாடு என்னவென்றால், இதுபோன்ற அழுக்கான ஆடைகளை அணிந்து வரக் கூடாது. இந்த மோசமான ஆடைகளை அணியக் கூடாது. நல்ல ஆடைகளை அணியுங்கள். அல்லாஹ்வின் அருட்கொடைகளை வெளிப்படுத்துங்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானோம். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தலைமுடி கலைந்திருந்த ஒரு நபரைக் கண்டார்கள். அதாவது, தலைமுடி ஒழுங்கற்ற நிலையில் இருந்தது. 'இவருக்குத் தன் தலைமுடியைச் சீர்படுத்திக் கொள்ள எதுவும் கிடைக்கவில்லையா?' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இவர் ஏன் தமது முடியை சுத்தம் செய்து சீவி ஒழுங்குப்படுத்திக் கொள்வதில்லை? என்று தமது தோழர்களிடம் கூறினார்கள். அழுக்கான ஆடைகளை அணிந்திருந்த மற்றொரு மனிதரை அன்னார் (ஸல்) பார்த்தார்கள். மேலும் கூறினார்கள்: தனது ஆடைகளைத் துவைப்பதற்கு இவருக்குத் தண்ணீர் கிடைக்கவில்லையா? (நூல்: ஸுனன் அபூ தாவூத், கிதாபுல் லிபாஸ், ஹதீஸ்: 4062)

தண்ணீர் கிடைக்கத்தான் செய்கிறது; எனவே அழுக்கு ஆடைகளை அணிவதற்குப் பதிலாக ஆடைகளைத் துவையுங்கள். அல்லாஹ்வுக்கு நன்றியோடு இருங்கள். தூய்மை என்பது ஒருபுறம் சுகாதாரத்தைப் பிரதிபலிப்பதைப் போல, மறுபுறம் அது அல்லாஹ்வுக்குச் செய்யும் நன்றியுணர்வையும் காட்டுகிறது.

'என்ன நிலைமை இது!' என்று பிறர் சொல்லும் வகையில் நம் தோற்றத்தை வைத்துக் கொள்ளக் கூடாது.

அதேபோல் மற்றோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இருந்து அறிவிக்கின்றார்கள்:

எவருடைய உள்ளத்தில் அணுவளவு பெருமை இருக்கிறதோ அவர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, தனது ஆடை நல்லதாக இருக்க வேண்டும் ; மேலும் தனது காலணி நல்லதாக இருக்க வேண்டும் என மனிதன் விரும்புகிறான் என்று ஒரு நபர் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் அழகான்வன் ஆவான்; மேலும், அவன் அழகையே விரும்புகிறான். அல்லாஹ்வும் அழகான்வன் ஆவான்; மேலும், அவன் அழகையே விரும்புகிறான். என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், ஆணவம் என்பது என்னவென்றால், தன்னைத் தானே உயர்ந்தவராகக் கருதுவதன் காரணத்தினால் உண்மையை மறுப்பதும், மக்களைச் சிறுமையாகக் கருதுவதுமே ஆகும். (நூல்: ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான், ஹதீஸ்: 123)

உண்மையான கூற்றை மறுப்பதும், மக்களுடன் ஏளனமாக நடப்பதும் அகந்தையாகும். அல்லது நல்ல ஆடைகளை அணிந்து கொண்டு அகந்தை கொண்டால் பின்னர் அது அகந்தையாக இருக்கும். ஆனால், நல்ல ஆடைகளை அணிந்து கொண்டு பணிவோடு பிறரை சந்திக்கின்றீர்கள் என்றால், பிறரின் உரிமைகளை நிறைவேற்றுகின்றீர்கள் என்றால் பின்னர் அது அகந்தையாகாது.

ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எப்போது ஏதாவது புதிய ஆடை வாங்கினாலும், துணியின் சட்டை அல்லது தலைப்பாகை போன்ற அந்த ஆடையின் பெயரைக் குறிப்பிட்டு இறைவனிடம் இவ்வாறு துஆ செய்வார்கள்:

அல்லாஹ்வே! எல்லாப் புகழும் உனக்கே உரியதாகும். நீயே! எனக்கு இதை ஆடையாக அணிவித்துள்ளாய்! நான் உன்னிடமே இதற்கான நன்மையை வேண்டுகிறேன். மேலும், இது எந்த நன்மைக்காக உருவாக்கப்பட்டுள்ளதோ அந்த நன்மையையும் நான் உன்னிடம் வேண்டுகிறேன். மேலும், இதிலுள்ள தீமையிலிருந்தும், இது எந்த் தீமைக்காக உருவாக்கப்பட்டுள்ளதோ அந்தத் தீமையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். (சுனன் அபூ தாவூத், கிதாபுல்-லிபாஸ், ஹதீஸ்: 4020)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'அல்லாஹ் ஓர் அடியானுக்கு ஏதேனும் ஓர் அருட்கொடையை வழங்கி, இது அல்லாஹ்விடமிருந்தே கிடைத்தது என்பதை அந்த அடியான் உணர்ந்து கொண்டால், பின்னர் அந்த அருட்கொடைக்கான நன்றி அவருடைய பெயரில் எழுதப்பட்டுவிடுகிறது. மேலும், அல்லாஹ் ஓர் அடியானின் பாவத்திற்காக அவர் மனதில் ஏற்படும் மனவருத்தத்தை அறிந்து கொள்ளும்போது, அவர் பாவமன்னிப்பு கேட்பதற்கு முன்பாகவே அவரை மன்னித்துவிடுகிறான். ஒரு நபர் ஒரு தீனாரைக் கொடுத்து ஆடையை வாங்கி, அதை அணிந்து அல்லாஹ்வைப் புகழ்கிறார்

என்றால், அந்த ஆடை அவரது முழங்காலைத் தொடுவதற்கு முன்பாகவே அவர் மன்னிக்கப்பட்டுவிடுகிறார். (கிதாப் அஷ்ஷுக்ர், இப்னு அபி துன்யா, பக்கம் 20)

**நன்றியுணர்வு உள்ளவர்களிடம் அல்லாஹ் இத்தகைய பெருந்தன்மையுடன் நடந்துகொள்கிறான்.'**

ஸாலிம் அவர்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் வழியாக அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏதேனும் ஒரு போரிலிருந்து திரும்பி வரும்போது, வழியில் உள்ள கணவாய் அல்லது உயர்ந்த மேடான பகுதிக்கு வந்தால் மூன்று முறை 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ் பெரியவன்) எனக் கூறுவார்கள். பின்னர் பின்வருமாறு கூறுவார்கள்:

பொருள்: அல்லாஹ் ஒருவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவருமில்லை.அவனுக்கு இணையானவர் யாருமில்லை. அனைத்து ஆட்சியும் அவனுக்கே உரியதாகும்.அனைத்து சிறப்புகளும் அவனுக்கே உரியவையாகும். அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் வல்லமை படைத்துள்ளான்.நாங்கள் எங்களது தவறுகளை ஒப்புக் கொண்டவாறு பயணத்திலிருந்து திரும்புகின்றோம்; மேலும், இனி நாங்கள் தவறிழைக்க மாட்டோம் என்று நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். நாங்கள் எங்கள் இறைவனையே வணங்குபவர்கள் ஆவோம்; எங்களது இறைவனுக்கு முன்னிலையிலேயே சிரம் பணிபவர்கள் ஆவோம்; எங்கள் இறைவனையே புகழ்பவர்கள் ஆவோம்; நிச்சயமாக, அல்லாஹ் தன் வாக்குறுதியை மெய்ப்பித்துக் காட்டினான்; மேலும், தன் அடியானை நினைவுகூர்ந்தான்; மேலும், அனைத்து எதிரிப் படைகளையும் தனியாகவே தோல்வியுறச் செய்து ஓடச் செய்தான்.(ஸஹீஹுல்-புகாரி, கிதாபுல்-ஜிஹாத் வஸ்-ஸியர், ஹதீஸ்: 2995)

பத்ருப் போரின் நாளில், காஃபிர்களில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பத்ர் மைதானத்தின் குழிகளிலும், கிணறுகளிலும் போடப்பட்டன. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அபூஜஹ்லை அவமானப்படுத்தி, அவனை அழித்து, அவனிடமிருந்து நமக்கு விடுதலையளித்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.' கொல்லப்பட்டவர்கள் அனைவரும் கிணற்றில் போடப்பட்டபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவர்களைச் சுற்றி வலம் வந்தார்கள். அந்தக் குழியில் கொல்லப்பட்டவர்கள் இருந்தனர். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு நபரின் பெயராக குறிப்பிட்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கூறிக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்தவாறும், அவனுக்கு நன்றி செலுத்தியவாறும் கூறினார்கள்: எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.(கிதாபுல் அல்வாஃகிதி, தொகுதி 1, பக்கம் 111-112, தார் அல்-அஃலமீ, பெய்ரூத் 1989)


Proprietor off : 044- 2260 1886

RAZIK XEROX & TELECOM

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET, ADAMBAKKAM, CHENNAI-600 088

E-MAIL: razikxerox@gmail.com


அன்னாரின் உயிர் எதிரி தன் செயல்களுக்கான கூலியை அடைந்தபோது, அன்னாரின் எதிர்வினை எவ்வித வெளிப்படையான மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துவதாக இருக்கவில்லை; மாறாக அல்லாஹ்வின் முன்னிலையில் பணிந்து அவனுக்கு நன்றி செலுத்தினார்கள். இது குறித்து பிற அறிவிப்புகளும் உள்ளன.

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பத்ர்ப் போரின் நாளில் நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, நான் அபூ ஜஹ்லைக் கொன்றுவிட்டேன்' என்று கூறினேன். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அப்படியா! வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; அவன் மீது சத்தியமாகவா?' என்று கேட்டார்கள். அதற்கு நான், 'ஆம்! வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் மீது சத்தியமாக நான் அவனைக் கொன்றுவிட்டேன்' என்று கூறினேன்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இதனை மூன்று முறை திருப்பிச் சொல்லி என்னிடம் உண்மைப்படுத்திக் கொண்டார்கள்.பிறகு கூறினார்கள்:

அல்லாஹ் மிகப் பெரியவன் ஆவான்; தன் வாக்குறுதியை மெய்ப்பித்துக் காட்டி, தன் அடியாருக்கு உதவி செய்து, எதிரிப் படைகளைத் தனி ஒருவனாகத் தோற்கடித்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியதாகும். பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'வா! என்னுடன் வந்து அவனது உடலை எனக்குக் காட்டு!

எனவே நாங்கள் புறப்பட்டோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவனைக் கண்டபோது, 'இவன் இந்தச் சமுதாயத்தின் ஃபிர்அவ்ன்' ஆவான் என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பு உள்ளது. அபூ ஜஹ்லின் தலையைப் பற்றிய நற்செய்தி கிடைத்த நாளன்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள்.

இதன் கூடுதல் விவரம் ஓர் அறிவிப்பில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.அபூ இஸ்ஹாக் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

பத்ர்ப் போர் நாளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், அபூ ஜஹ்ல் கொல்லப்பட்ட நற்செய்தியைக் கொண்டு சென்றவர் வந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவரிடம், 'வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; அந்த அல்லாஹ்வின் மீது மூன்று முறை சத்தியம் செய்து கூறும்படி கூறினார்கள். மேலும், நீ உண்மையாகவே அவனைக் கொல்லப்பட்ட நிலையில் கண்டாயா?என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் முன்னிலையில் அவர் சத்தியம் செய்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸஜ்தா செய்தார்கள்.

சில அறிவிப்புகளில், அன்னார் (ஸல்) ஒன்றுக்கும் மேற்பட்ட ஸஜ்தாக்களைச் செய்தார்கள் என்று உள்ளது.

மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின்போது நன்றியுணர்வு பற்றிய அறிவிப்புகளும் கிடைக்கின்றன.

மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் அறிவிப்புகளும் கிடைக்கின்றன.

இது தொடர்பாக ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் நாளில் கஃபாவின் படியில் நின்றார்கள். பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள்; அவனை துதித்தார்கள். மேலும் கூறினார்கள்:

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்; அவன் தன் வாக்குறுதியை மெய்ப்பித்துக் காட்டினான். தன் அடியாருக்கு உதவி செய்தான், மேலும் எதிரிகளின் அனைத்துப் படைகளையும் அவன் ஒருவனே தோற்கடித்தான். (நூல்: ஸுனன் அந்-நஸாயீ, கிதாபுல் கஸாமா, ஹதீஸ்: 4803)

புஹாரியின் ஓர் அறிவிப்பில் உள்ளது. அப்துர் ரஹ்மான் இப்னு அபீ லைலா அறிவிக்கின்றார்:

ஹஸ்ரத் உம்மு ஹானீ (ரலி) அவர்களைத் தவிர வேறு யாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை லுஹா (சாஷ்த்) தொழுகை தொழுவதைக் கண்டதாக எங்களிடம் அறிவிக்கவில்லை. லுஹா தொழுகையைப் பற்றி கிடைக்கும் அறிவிப்புகளில், ஹஸ்ரத் உம்மு ஹானீ (ரலி) அவர்களின் இந்த ஓர் அறிவிப்பைத் தவிர வேறு அறிவிப்புகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் லுஹா தொழுதார்கள் என்பதை அவர்களின் அந்த அறிவிப்பு எவ்வாறு விவரிக்கிறது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் நாளில் எனது வீட்டிற்கு வருகை தந்தார்கள்; குளித்துவிட்டு எட்டு ரக்அத்கள் தொழுதார்கள். அவர் கூறுகிறார்: 'இதை விட சுருக்கமான ஒரு தொழுகையை நான் ஒருபோதும் கண்டதில்லை. அது மிகவும் எளிமையான தொழுகையாக இருந்தது. ஆனால் எட்டு ரக்அத்துகளையும் முழுமையான ருகூஃ மற்றும் ஸஜ்தாவுடன் தொழுதார்கள். (நூல்: ஸஹீஹுல் புஹாரி, கிதாபுத் தஹஜ்ஜுத், ஹதீஸ்: 1176)

இதன் பொருள் அவசர அவசரமாகத் தொழுதார்கள் என்பதல்ல. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எளிமையான தொழுகை கூட நமது நீண்ட தொழுகைகளைப் போன்றே இருந்தது.

ஒரு வரலாற்று ஆசிரியர் இந்நிகழ்வை பின்வரும் தலைப்பின் கீழ் எடுத்துரைத்துள்ளார்:

அல்லாஹ் அந்நாளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு அளித்த வெற்றிக்காக, அன்னார் (ஸல்) அவர்கள் நன்றி செலுத்தும் விதமாக எட்டு ரக்அத்துகள் தொழுதார்கள். (நூல்: தலாயிலுன் நுபுவ்வா - பைஹகீ, தொகுதி: 05, பக்கம்: 80 தாருல் குதுபில் இல்மியா)

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் புனித மக்காவிற்குள் நுழைந்தபோது, மக்கள் அவர்களைக் காண்பதற்காக வந்தார்கள்.

பணிவு மற்றும் நன்றியுணர்வின் காரணமாக அன்னாரின் தலை ஒட்டகச் சேணத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. அன்னார் (ஸல்) மக்களுக்கு மத்தியில் இருந்தார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ்வே! நிச்சயமாக உண்மையான வாழ்க்கை என்பது மறுமையின் வாழ்க்கையே ஆகும்.' (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 226, தாருல் குதுபில் இல்மியா)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ் தன் சிறப்பு மிக்க அடியார்களுக்கு வழங்கும் இந்த மேன்மையானது பணிவின் வடிவில் இருக்கின்றது. ஆனால், ஷைத்தானின் உயர்வானது அகந்தையோடு கலந்திருக்கின்றது.

பாருங்கள்! எவ்வாறு துயரங்கள் மற்றும் கடினங்கள் மிக்க அந்தக் காலங்களில் நம்முடைய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரம் தாழ்த்தி ஸஜ்தா செய்தார்களோ அதேபோன்று அன்னார் (ஸல்) மக்காவை வெற்றி கொண்டபோதும், தமது தலையைத் தாழ்த்தி ஸஜ்தா செய்தார்கள். மேலும் இதே மக்காவில் எல்லா புறமிருந்தும் எப்படி எதிர்ப்புகள் செய்யப்பட்டனவோ மற்றும் துன்பங்கள் கொடுக்கப்பட்டனவோ அப்போது அன்னார் (ஸல்) எவ்வாறு தமது தலையைத் தாழ்த்தி ஸஜ்தா செய்து வந்தார்களோ, அதே போன்று வெற்றி நாளன்றும் அன்னார் (ஸல்) சிரம் தாழ்த்தி ஸஜ்தா செய்தார்கள். தாம் எந்த நிலையில் இங்கிருந்து சென்றோம்; தற்போது எந்த நிலையில் திரும்பியிருக்கிறோம் என்பதை அன்னார் (ஸல்) கண்டபோது, அன்னாரின் இதயம் இறைவனுக்கான நன்றியுணர்வால் நிறைந்து விட்டது; அன்னார் (ஸல்) ஸஜ்தா செய்தார்கள். (மல்ஃபூஸாத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை), தொகுதி 3, அடிக்குறிப்பு பக்கம் 260, பதிப்பு 2022)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு துஆவைப் பற்றிய குறிப்பு ஸஹீஹ் முஸ்லிமின் ஓர் அறிவிப்பில் கிடைக்கிறது. ஹஜ்ஜத்துல் விதாவின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃபா மற்றும் மர்வாவுக்கு இடையே வலம் வந்தார்கள். இதற்கான எண்ணம் கொண்டபோது, அன்னார் (ஸல்) ஸஃபாவிலிருந்து தொடங்கினார்கள். மேலும் அதன் மீது ஏறினார்கள். எந்த அளவில் என்றால், அன்னார் (ஸல்) பைத்துல்லாஹ்வைக் கண்டார்கள். பிறகு கிப்லாவை நோக்கித் திரும்பி, அல்லாஹ் தஆலாவின் ஏகத்துவத்தை எடுத்துரைத்தார்கள். மேலும், அவனது மகத்துவத்தைக் குறிப்பிட்டார்கள். கூறினார்கள்:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் ஏகன் ஆவான். அவனுக்கு இணை யாருமில்லை; ஆட்சி அவனுக்கே உரியது; அனைத்துப் புகழும் அவனுக்கே உரியது; அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் வல்லமை படைத்தவன் ஆவான். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை; அவன் தனித்தவன் ஆவான்;அவன் தன் வாக்குறுதியை நிறைவேற்றினான்; மேலும், தன் அடியானுக்கு உதவி செய்தான்; எதிரிப் படைகளைத் தனித்துத் தோற்கடித்து விட்டான்.

பின்னர், இதற்கிடையில் அன்னார் (ஸல்) துஆ செய்தார்கள். துஆவின் நிலையில் மூன்று முறை இதே போன்று அன்னார் (ஸல்) செய்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் மொழிபெயர்ப்பு பாகம் 6, பக்கம் 118, கிதாபுல் ஹஜ், பாப் ஹஜ்ஜதுந் நபி (ஸல்), ஹதீஸ் 2123, நூர் ஃபவுண்டேஷன்)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஏமனிலிருந்து 'ஹம்தான்' கோத்திரத்தாரின் தகவலை தெரிவித்ததைப் பற்றிய ஓர் அறிவிப்பு வருகிறது:

ஹஸ்ரத் பராஃ இப்னு ஆஸிப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹிஜ்ரீ 10-இல் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஏமன் நோக்கி அனுப்பி வைத்தார்கள். முழு ஹம்தான் கோத்திரத்தாரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய தகவலை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குக் கடிதம் மூலம் அனுப்பினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அக்கடிதத்தைப் படித்தபோது, ஸஜ்தாவில் விழுந்தார்கள்; மேலும், 'ஹம்தான் மீது சாந்தி உண்டாகட்டும்! ஹம்தான் மீது சாந்தி உண்டாகட்டும்!' என்று இரண்டு முறை கூறினார்கள். (ஷரஹ் அஸ் ஸுர்கானீ பாகம் 4, பக்கம் 140, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்; ஸுபுலுல்-ஹுதா வர்-ரஷாத் பாகம் 8, பக்கம் 205, தாருல் குதுபில்-இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த நன்றி ஸஜ்தாக்கள் பற்றிய கூடுதல் விவரங்கள் பின்வருமாறு கிடைக்கின்றன. ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் அல்லது சந்தோஷத்தை ஏற்படுத்தும் எந்தவொரு விஷயம் வந்தாலும், அவர்கள் அல்லாஹ் தபாரக வ தஆலாவிற்கு நன்றி செலுத்தும் விதமாக ஸஜ்தாவில் விழுந்து விடுவார்கள். (ஸுனன் இப்னு மாஜா, கிதாப் இகாமதிஸ் ஸலாத், பாப் மா ஜாஅ ஃபிஸ் ஸலாத்... ஹதீஸ் 1394)

அதேபோல், ஹஸ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஓர் இலக்கு குறித்து நற்செய்தி வழங்கப்பட்டபோது, அன்னார் (ஸல்) நன்றி செலுத்தியவாறு ஸஜ்தாவில் விழுந்தார்கள். (ஸுனன் இப்னு மாஜா, கிதாபு இகாமதிஸ் ஸலாத், பாப் மா ஜாஅ ஃபிஸ் ஸலாத்... ஹதீஸ் 1392)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதுவதால் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் நற்செய்தி வழங்கினான். மேலும், அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எத்தகைய நன்றியுணர்வை வெளிப்படுத்தினார்கள் என்பது தொடர்பாக ஒரு ஹதீஸில் இவ்வாறு குறிப்புக் கிடைக்கிறது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வெளியே வருகை தந்தார்கள். மேலும், தமது ஸதகாவிற்கான இடத்தின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். பின்னர் உள்ளே சென்றார்கள். கிப்லாவை நோக்கித் திரும்பி ஸஜ்தாவில் விழுந்து விட்டார்கள்; மேலும் மிக நீண்ட நெடிய ஸஜ்தா செய்தார்கள். எந்தளவுக் கென்றால், கண்ணியமும், கம்பீரமும் மிக்க அல்லாஹ் இந்த நிலையிலேயே அன்னாரின் உயிரைக் கைப்பற்றிவிட்டானோ என்ற எண்ணம் தோன்றியது! எனவே நான் அவர்களுக்கு அருகில் சென்று அமர்ந்தேன். அப்போது அவர்கள் தலையை உயர்த்தி, 'யார் இது?' என்று கேட்டார்கள். நான் 'அப்துர் ரஹ்மான்' என்று பதிலளித்தேன். என்ன விஷயம்?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு நான் கூறினேன்: 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எவ்வளவு நீண்ட ஸஜ்தா செய்தீர்கள் என்றால், கண்ணியமும், கம்பீரமும் மிக்க அல்லாஹ் அந்த நிலையிலேயே தங்களின் உயிரைக் கைப்பற்றி விட்டானோ! என்று எனக்கு ஐயம் ஏற்பட்டு விட்டது;அதாவது மரணம் சம்பவித்து விட்டதோ என்று தோன்றியது.

அப்போது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்தார்கள். மேலும், 'எவர் உம் மீது ஸலவாத் ஓதுகிறாரோ, அவர் மீது நான் எனது அருளை புரிவேன்; எவர் உம் மீது ஸலாம் சொல்கிறாரோ, அவருக்கு நான் ஸலாம் அனுப்புவேன் என்று அல்லாஹ் கூறுகிறான் என்று என்னிடம் கூறியவாறு நற்செய்தி வழங்கினார்கள். கண்ணியமும், கம்பீரமும் மிக்க அல்லாஹ்வுக்கு இதற்கு நன்றி செலுத்தும் விதமாக ஸஜ்தா செய்திருந்தேன். (முஸ்னத் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் - முஸ்னத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், தொகுதி 1, பக்கம் 512-513, ஹதீஸ்: 1664)

மேலும், இவ்வளவு நீண்ட ஸஜ்தா நன்றி செலுத்தும் விதமாகவே செய்யப்பட்டது.

ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அன்னார் (ரலி) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக் கண்டார்கள். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் நற்செய்தி வழங்கக் கூடிய ஒருவர் வந்தார். அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் படை, எதிரியின் மீது வெற்றி பெற்ற நற்செய்தியை வழங்கிக் கொண்டிருந்தார். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தலை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மடியில் இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று ஸஜ்தாவில் விழுந்து விட்டார்கள். (ஸுபுலுல் ஹுதா வர்-ரஷாத், தொகுதி 8, பக்கம் 205)

மற்றோர் அறிவிப்பில் உள்ளது: அம்ர் பின் ஷுஐப் அவர்கள் தமது தந்தையிடமிருந்தும், அவர் தமது பாட்டனாரிடமிருந்தும் அறிவிக்கிறார்கள்; அன்னார், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டார்கள்:

இரண்டு பண்புகள் எவரிடம் காணப்படுகிறதோ,அவரை அல்லாஹ் பொறுமையாளர் மற்றும் நன்றியுடையவர் என்று எழுதி விடுகிறான். எவரிடம் அவ்விரு பண்புகளும் இல்லையோ,அவரை அல்லாஹ் பொறுமையாளராகவும் எழுதுவதில்லை. நன்றி செலுத்துபவராகவும் எழுதுவதில்லை.

முதலாவது,தனது மார்க்க விவகாரத்தில் தன்னை விட உயர்ந்த நிலையில் உள்ளவரைப் பார்த்து, அவரைப் பின்பற்றுகின்றவர் ஆவார். இரண்டாவது

பண்பு, மார்க்க விவகாரத்தில் தன்னை விட உயர்ந்தவரைப் பார்த்து, பின்னர், தான் அவரை பின்பற்ற வேண்டும்;மற்றும் அவருக்கு சமமான இடத்தை அடைய வேண்டும் என்று பார்ப்பவர் ஆவார்.

இரண்டாவது நிபந்தனை என்னவென்றால், தனது உலக விவகாரத்தில் தன்னை விட தாழ்ந்த நிலையில் உள்ளவரைப் பார்க்க வேண்டும்; பின்னர், அல்லாஹ்வைப் புகழ வேண்டும்.

அதாவது, உலக விவகாரங்களில் தன்னை விட தாழ்ந்த நிலையில் உள்ள நபரைப் பார்க்க வேண்டும். பின்னர் அல்லாஹ்வை புகழ வேண்டும். பின்னர், அல்லாஹ் தனக்கு மேன்மை வழங்கியுள்ளான் என்று நன்றி செலுத்த வேண்டும். அதாவது, மேலும் இந்த விஷயத்தில் அல்லாஹ் தனக்கு அந்த நபரை விட மேன்மை வழங்கியுள்ளான் என்று அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஆக, எந்த நபரிடம் இந்தப் பண்பு உள்ளதோ, அவரை அல்லாஹ் பொறுமையாளராகவும், நன்றி செலுத்துபவராகவும் எழுதி விடுகிறான்.

நன்றியுடையவராக எழுதிவிடுகிறான். ஆனால், தன் மார்க்க விஷயத்தில் தன்னை விடக் குறைவானவரைப் பார்த்து, தன் உலக விஷயத்தில் தன்னை விட மேலானவரைப் பார்த்து, தன்னிடம் தவறிப்போன பொருளுக்காக வருந்தினால்,அல்லாஹ் அவரைச் சகிப்புத்தன்மை உடையவராகவும் எழுதுவதில்லை, நன்றியுடையவராகவும் எழுதுவதில்லை. (கிதாபுஷ்-ஷுக்ர், இப்னு அபீ துன்யா, பக்கம் 60, மக்தபத்துத் துராஸுல்-இஸ்லாமியா 1994)

அதேபோல ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உங்களை விடக் கீழே உள்ளவரைப் பாருங்கள்! உங்களை விட மேலே உள்ளவரைப் பார்க்காதீர்கள்! அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருட்கொடைகளை நீங்கள் குறைவாக மதிப்பிடாமல் இருக்க இதுவே மிகவும் உகந்ததாகும். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸாஹித் வர்-ரகாயிக், ஹதீஸ் 5250, தொகுதி 15, பக்கம் 159, நூர் பவுண்டேஷன்)

அதாவது உலக விவகாரங்களில் கீழே உள்ளவரைப் பாருங்கள். பின்னர், அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான்கு விஷயங்கள் யாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ, அவருக்கு உலகம் மற்றும் மறுமையின் நன்மை கொடுக்கப்பட்டுவிட்டது.

**ஒன்று, நன்றியுள்ள உள்ளம். இறைவனை நினைவுகூரும் நாவு, சோதனையின் போது பொறுமை காக்கும் உடல், தனது கண்ணியம் மற்றும் கற்பின் விவகாரத்திலும், தன் கணவனின் சொத்திலும் துரோகம் செய்யாத மனைவி.**

நல்ல மனைவியும், எஞ்சிய மூன்று விஷயங்களும் யாருக்குக் கிடைக்கிறதோ அவருக்கு நன்மை அருளப்படுகிறது. (கிதாபுஷ் ஷுக்ர், இப்னு அபீ துன்யா, பக்கம் 17, மக்தபத் அல்-துராத் அல்-இஸ்லாமி 1994)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓ அபூஹுரைரா! இறையச்சமுடையவராக இருங்கள்; அனைத்து மக்களிலும் அதிக இறை வணக்க முடையவராக இருப்பீர்கள். போதும் என்ன மனம் படைத்தவராக இருங்கள்; நீங்கள் அனைத்து மக்களிலும் அதிக நன்றி செலுத்துபவராக இருப்பீர்கள்.

எனவே போதும் என்ற மனம் நன்றியுணர்வின் பக்கம் அழைத்துச் செல்லும். உங்களுக்கு எதை விரும்புகிறீர்களோ, அதையே மற்ற மக்களுக்கும் விரும்பும்போது, நீங்கள் உண்மையான நம்பிக்கையாளராக இருப்பீர்கள். உங்களுடைய அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொண்டால் நீங்கள் முஸ்லிமாக இருப்பீர்கள். குறைவாகச் சிரியுங்கள், ஏனெனில் அதிகமான சிரிப்பு உள்ளத்தை மரணிக்கச் செய்துவிடும். (ஸுனன் இப்னு மாஜா, கிதாபுஸ் ஸுஹ்த், பாப் அல்-வறஃ வத்-தக்வா, ஹதீஸ் 4217)

அதாவது மனிதன் அல்லாஹ் தஆலாவின் முன்னிலையில் அதிகம் குனிபவனாக இருக்க வேண்டும். துஆக்களின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். எப்போதும் கேலியும் கிண்டலும் செய்து கொண்டு இருக்கக் கூடாது. அல்லாஹ்த ஆலா நம்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளையின்படி செயல்படக் கூடியவர்களாக ஆக்குவானாக.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலையான நன்றியுணர்வு மற்றும் இறை தியானத்தின் சித்திரத்தை வரைந்தவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அனைத்து நேரங்களிலும் இறை தியானம் செய்து வந்தார்கள்.' (ஸஹீஹ் முஸ்லிம் மொழிபெயர்ப்பு: கிதாபுல் ஹைழ், பாப் திக்ருல்லாஹி தஆலா ஃபீ ஹாலில் ஜனாபத்தி வஃகைரிஹா, ஹதீஸ்: 550, தொகுதி: 2, பக்கம்: 126, வெளியீடு: நூர் பவுண்டேஷன்)

எனவே, அன்னார் (ஸல்) தம் உம்மத்திற்கு முன்பாகத் தமது முன்மாதிரியின் மிக உயர்ந்த தரத்தை நிலைநாட்டி, நமக்கு அறிவுரையும் வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் தஆலா இதன் மீது செயல்பட நமக்கும் அருள் புரிவானாக!

இரண்டாவதாக நான் இந்த விஷயத்தைச் சுருக்கமாகக் கூறிவிடுகின்றேன். அதாவது, இன்ஷா அல்லாஹ்! வரும் வெள்ளிக்கிழமை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பிரிட்டனின் வருடாந்திர மாநாடு தொடங்குகிறது. அல்லாஹ் தஆலா அதனை அனைத்து விதங்களிலும் அருளுக்குரியதாக ஆக்க துஆ செய்யுங்கள். ஒவ்வொருவரையும் எல்லா வகையிலும் தனது பாதுகாப்பிலும், அரவணைப்பிலும் வைப்பானாக!

இப்போதெல்லாம் வெயிலின் காரணமாகக் காணப்படும் இந்த வானிலை தீவிரத்தினால் சில ஆபத்துகளும் உள்ளன. அனைத்து விதமான தீய விளைவுகளிலிருந்தும் அல்லாஹ் தஆலா பாதுகாப்பானாக!

அதேபோல, டியூட்டி கொடுக்கக் கூடிய தொண்டர்கள் இருக்கின்றனர். அவர்கள் சில நேரங்களில் கடுமையான வெயிலில் நின்றுகொண்டும் டியூட்டி செய்ய நேரிடுகின்றது; கடுமையான பணிகளும் உள்ளன. அல்லாஹ் அவர்களுக்கும் தங்களின் கடமைகளை அழகிய முறையில் நிறைவேற்ற நற்பேறு வழங்குவானாக!

தமிழாக்கம்
முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

(தினசரி அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 8 ஆகஸ்ட் 2026, பக்கம் 1 முதல் 8)

* * * * * * * * * * *

## ஜமாஅத் செய்திகள்

### சென்னை ஆதம் பாக்கம் லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பின் பாண்டிச்சேரி சுற்றுலா

ஆதம்பாக்கம் லஜ்னா இமாயில்லாஹ் கிளை அமைப்பின் சார்பில் இம்மாதம் ஆகஸ்ட் 2-ம் தேதி பாண்டிச்சேரிக்கு ஒரு நாள் சிறப்பு கல்வி மற்றும் பொழுதுபோக்கு சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.

மஸ்ஜித் ஹாதியிலிருந்து துஆவுடன் காலை 7 மணியளவில் தொடங்கிய இந்தப் பயணத்தில் இறையருளால் 26 லஜ்னாக்களும், 5 சிறுமிகளும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். சுமார் 160 கி.மீ-க்கும் அதிகமான இந்தப் பயணத்தில் பேருந்திலேயே சுவாரஸ்யமான சில விளையாட்டுப் போட்டிகளும், கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

இந்தச் சுற்றுலாவின்போது உறுப்பினர்கள் புதுச்சேரி அருங்காட்சியகம், ஃபிரெஞ்ச் காலனித்துவப் பகுதியான ஒயிட் டவுண் மற்றும் பாரடைஸ் பீச் ஆகிய இடங்களைப் பார்வையிட்டனர். மேலும் மாங்க்ரோவ் காட்டுப் பகுதியில் நடைபெற்ற படகு சவாரியின் மூலம் கடலும், நதியும் சங்கமிக்கும் இடம், பாண்டிச்சேரி மீன்பிடித் துறைமுகம் மற்றும் 2000 ஆண்டுகள் பழமையான வரலாற்றுச் சிறப்பு மிக்க அரிகமேடு தொல்பொருள் துறைமுகப் பகுதி ஆகியவற்றை லஜ்னா உறுப்பினர்கள் கண்டு களித்தனர்.

பயணத்திற்கு இடையில் ஜமாஅத்தான தொழுகைக்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. அதேபோன்று அனைவருக்கும் உணவுக்கான சிறப்பு ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. உறுப்பினர்களுக்கு புத்துணர்ச்சியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திய இந்தச் சுற்றுலா நிறைவுற்று அன்றிரவே அனைத்து உறுப்பினர்களும் பாதுகாப்பாக இறையருளால் தத்தமது இல்லங்களுக்கு சென்றடைந்தனர். அல்ஹம்துலில்லாஹ் அலா ஸாலிக்.

அமத்துர் ராஸிகா ஸாஹிபா
ஸத்ர் லஜ்னா
ஆதம்பாக்கம், சென்னை

* * * * * * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

## 12-ம் பக்கத் தொடர்ச்சி (ஹுஸூர் சுற்றுப் பயணம்)...

பாடத்தில் சேருங்கள். முதலில் ஆங்கிலத்தில் டிப்ளமோ படியுங்கள்; பிறகு டிகிரி படியுங்கள். பின்னர் நமது மொழிபெயர்ப்பு செய்யக் கூடிய குழுவில் இணைந்து, உருதுவிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யுங்கள். உங்களுக்காக நான் இதைத்தான் விரும்புகிறேன். நீங்கள் ஆங்கில மொழியை பயிலுங்கள்; மேலும், அதில் எந்த அளவு தேர்ச்சி பெற வேண்டும் என்றால், Eloquent ஆகிவிடுங்கள். இதனால் சிறப்பாக மொழிபெயர்ப்பு செய்ய முடியும்.

கேள்வி: நான் பாகிஸ்தானில் பட்டப் படிப்பு பயின்று உள்ளேன். உளவியல் மற்றும் சமூகவியல் ஆகியவை எனது பாடங்களாக இருந்தன. இஸ்லாமாபாத் காலேஜ் ஃபார் கேல்ர்ஸ் என்ற கல்லூரியில் நான் படித்தேன் என்று ஒரு பெண் கூறினார்.

ஹுஸூர் அன்வர் அவர்கள், அவரிடம் வினவியபோது, அது ஆங்கில மீடியம் என்று கூறினார். அதற்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: நன்றி ; 'அது நல்லது தான்.

மேலும், நான் தற்போது கணவருடன் ஆஸ்திரேலியாவில் இருக்கிறேன்; இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்று அந்தப் பெண் கூறினார்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: அத்துடன் படிப்பையும் தொடர முடிந்தால் தொடருங்கள். முதலில் உங்கள் ஆங்கில மொழியறிவை செம்மையாக்குங்கள், பின்னர் உளவியல் Anthropology- வில் சேர முடிந்தால் சேருங்கள்' என்று கூறினார்கள்.

நான் 6 மாத ஆங்கில கோர்ஸ் ஒன்றை செய்துள்ளேன் என்றும், தற்போது குழந்தைகள் நலப் பணியில் டிப்ளமோ செய்து வருகிறேன் என்றும் அந்தப் பெண் கூறினார்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: 'அதுவும் நல்லது தான். குழந்தைகள் நலப் பணியிலோ உளவியல் கற்பிக்கப்படுகின்றனர். ஆகட்டும்! இதை முடித்துவிட்டு, பின்னர் ஆசிரியப் பணிக்குச் செல்லுங்கள்.

கேள்வி: ஹுஸூர் அன்வர் அவர்களின் வாழ்க்கையில், இறைவன் உடனடியாக உதவி செய்துள்ளான் என்று உணரும் வகையிலான ஏதேனும் சந்தர்ப்பம் வந்துள்ளதா?' என்று ஒரு பெண் கேட்டார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இறைவன் உடனடியாக உதவி செய்துள்ள பெரும் பெரும் சந்தர்ப்பங்கள் வந்துள்ளன. ஒருமுறை எனக்கு ஒரு வேலை இருந்தது. அதை செய்து கொடுங்கள் என்று என் தந்தையிடம் எனக்கு கூறவேண்டியிருந்தது. ஆனால், நான் அவர்களிடம் கூறவில்லை. ஏனெனில், எதையும் சாதாரணமாகக் கேட்காத பழக்கம் உடையவன் என்பதால் நான் தயங்கினேன். 15 நிமிடங்கள் மட்டுமே நேரம் இருந்தது. நான் அல்லாஹ்விடம் கூறினேன்: இதோ 15 நிமிடங்கள் இருக்கின்றன ; என் வேலை முடிந்துவிட்டால், எனக்கோ ஏற்கெனவே ஈமான் உள்ளது. அது மேலும் வலுப்பெறும். 12 நிமிடங்கள் கழிந்தன; 13 நிமிடங்கள் கழிந்தன; 14 நிமிடங்கள் கழிந்தன; 15-வது நிமிடத்தில் என் தந்தை என்னை அழைத்தார்; மேலும், எந்த பணி நிறைவேறி விட வேண்டும் என்று என் மனதில் விருப்பம் இருந்ததோ அதனை தந்தையார் நிறைவேற்றி தந்து விட்டார்கள். இதேபோல இன்னும் ஏராளமான சம்பவங்கள் உள்ளன.

கேள்வி: ஹுஸூர் அவர்களுக்கு மெல்போர்ன் நகரம் பிடித்துள்ளதா?' என்று ஒரு பெண் கேட்டார்.

பதில்: ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் இங்கு நமது சென்டரை உருவாக்கியுள்ளீர்கள். மிகவும் அழகான இடத்தை வாங்கியுள்ளீர்கள். ஆனால் இதில் இன்னும் சிறந்த திட்டமிடல் செய்ய முடியும். இரண்டாவதாக, இன்று நான் சிறிது நேரம் உலாவுவதற்காகச் சென்றிருந்தேன். இங்கு அருகிலேயே Botanical Garden இருப்பதைப் பார்த்தேன். பின்னர் ஓர் உயர்ந்த அந்த மலைப் பகுதி உள்ளது, அதன் பெயர் Dandenong ஆகும். அங்கிருந்து கண்ட மெல்போர்ன் நகரத்தின் காட்சி அழகாக இருந்தது'.

மேலும், ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

எல்லா இடமும் நல்ல இடமாக இருக்கின்றது. நீங்கள் நல்லவராக இருந்தால், நல்லவராக ஆகிவிட்டால் பின்னர் மற்ற பொருட்களும் மேலும் அழகாக ஆகிவிடும். **(தொடரும்.......)**

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், நவம்பர் 22, 2013 - 28, நவம்பர் 2013)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *




**ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்)**

(நூலாசிரியர்- ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி))

**அரபு நாடும் அதன் குடிமக்களும் அவர்களின் பழக்கவழக்கங்களும் மற்றும் அவர்களின் சமூதாயப் பண்புகளும்**

**(சென்ற இதழின் தொடர்ச்சி....)**

போர்களில் அரேபியர்களின் வழக்கம் என்னவாக இருந்ததென்றால், அவர்கள் ஓர் உயர்ந்த இடத்தில் தீ மூட்டி, போர் நடக்கும் போது அதைத் தொடர்ந்து எரிய வைப்பார்கள்; அது அணைந்து போவதை ஒரு கெட்ட சகுனமாகக் கருதுவார்கள். அகழ் போரின் போது, படைத்தளபதிகளில் ஒருவரின் தீ அணைந்ததால் அவர் பயந்துபோய் தனியாகப் போர்க்களத்தை விட்டு ஓடிவிட்டார். இதனால் மீதிப் படையும் சிதறி ஓடியதை நாம் அடுத்துக் காண்போம்.

போரில் பொதுவாகப் பெண்களும் உடன் வருவார்கள். அரேபியர்களின் உணர்ச்சிகளைத் தூண்டுவதும், மான உணர்ச்சியை எழுப்புவதும், அவர்களுக்கு ஊக்கமளிக்கும் கவிதைகளைப் படித்து ஆவேச மூட்டுவதுமே அவர்களின் வேலையாக இருந்தது. காயம்பட்டவர்களைப் பராமரிக்கும் பணியையும் பெண்கள் செய்து வந்தனர். எனவே, இந்த முறை இஸ்லாத்திலும் ஒரு குறிப்பிட்ட எல்லை வரை நீடித்தது.

போரில் முதலில் ஒருவருக்கு ஒருவர் ஒற்றைக்கு ஒற்றையாக மோதிக்கொள்வதும், அதன் பிறகு பொதுவான தாக்குதல் நடத்துவதும் பொதுவான வழக்கமாக இருந்தது. போரில் அரேபியர்கள் பொதுவாக மூன்று வகையான ஆயுதங்களைப் பயன்படுத்தினர்: வில்,அம்பு, ஈட்டி மற்றும் வாள். தற்காப்பிற்காகக் கவச உடைகளும் தலைக்கவசங்களும் பயன்படுத்தப்பட்டன. அரேபியர்கள் குதிரைகள் மீதும் சவாரி செய்து போர் புரிந்தனர், காலாட்படையாகவும் போரிட்டனர். ஆனால், மாவீரர்களுக்கு இடையில் குதிரை சவாரி என்பது வீரத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது. போரின் போது குதிரையை விட்டு இறங்கி, அதன் கால் நரம்புகளை வெட்டி வீழ்த்துவதும் உண்டு; இதன் மூலம் 'நாங்கள் தப்பி ஓடுவதற்கு எந்த வழியையும் வைத்துக் கொள்ளவில்லை' என்பதை நிரூபிப்பார்கள். போர்களில் சுமை தூக்குவதற்காக ஒட்டகங்கள் பயன்படுத்தப்பட்டன.

அரேபியர்களிடம் வீரமும், தீரமும் மிக உயர்ந்த பண்புகளாகக் கருதப்பட்டன. அரேபியக் கவிஞர்கள் தங்கள் சொந்த மற்றும் தங்கள் குலத்தின் வீரச் செயல்களை மிகுந்த உணர்ச்சியோடு கவிதைகளாகப் பாடினர். வீரமும், கொடூரமும் அல்லது மரண பயமின்மையுமே அவர்களின் சமுதாய குணங்களில் மிக முக்கியமாக இருந்தன. மரணத்திற்குப் பயப்படுவது மிகவும் கடுமையான பழியாகக் கருதப்பட்டது; மரணத்திற்குப் பயப்படுபவன் அனைவரின் பார்வையிலும் இழிவாகக் கருதப்பட்டான். உண்மையில் அரேபியர்களின் வாழ்க்கைக்கே வீரமே அத்தியாவசியமான ஒன்றாக இருந்தது.

அரேபியர்களின் மான உணர்வு மற்றும் அகந்தையைப் பற்றிய கதைகள் மிகவும் புகழ்பெற்றவை. அம்ர் பின் குல்தூமின் புகழ்பெற்ற 'முஅல்லகா' கவிதை அரேபிய பாணியில் பேசுகிறது; இது அரேபியர்களின் மான உணர்விற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். பொதுவாக அரேபியர்கள் தங்கள் நலன்களுக்கு முன்னால் ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. இருப்பினும், அரேபியர்களின் நம்பகத்தன்மைக்கும், விசுவாசத்திற்கும் சில வியக்கத்தக்க உதாரணங்களும் உள்ளன. சாமுவேல் பின் ஆதியா தன் மகனைக் கொன்ற போதிலும் அம்ருல் கைஸின் அடைக்கலப் பொருளைப் பாதுகாத்த வரலாறு இதற்குச் சான்றாகும். (தொடரும்......)

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள், பக்கம் 55 - 59)

* * * * * * * * * * *

## 2-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்)...

பயணமாகும். எனவே, இந்தக் கடினமான பாதையைக் கடப்பதற்கு, எரிந்துகொண்டிருக்கும் நெருப்பைக் குளிர வைக்கும் மற்றும் தாகத்தின் போது மரணத்திலிருந்து காப்பாற்றும் 'பரஸ்பர ஒற்றுமை' எனும் குளிர்ந்த நீர் மிகவும் தேவையாகும்.

உங்கள் இரு சமூகங்களுக்கும் இடையே சமாதானம் தேவைப்படும் இந்த இக்கட்டான தருணத்தில், இந்த எழுத்தாளன் உங்களைச் சமாதானத்திற்காக அழைக்கிறான்.

இவை அஹ்மதிய்யா இயக்கத்தின் தோற்றுனரின் சொற்பொழிவிலிருந்து பெறப்பட்ட தொலைநோக்குப் பார்வை கொண்ட மேற்கோள்களாகும். இவற்றை இன்று இந்தியாவில் பரப்புவது மிகவும் அவசியமாகும். அல்லாஹ் தஆலா நம் அனைவருக்கும் இதற்கான நற்பேறை வழங்குவானாக. ஆமீன்.'

தமிழாக்கம்
முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 03 SEP 2026 Issue No. 36

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **அவர்களின்**

## ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் - 2013

**(அறிக்கை அப்துல் மஜீத் ஸாஹிப் தாஹிர்)**

### மெல்பேர்ன் வாகிஃபாத்தே நவ் பெண் பிள்ளைகளுக்கான வகுப்பு

வாகிஃபாத்தே நவ்' சிறுமிகளுக்கான வகுப்பு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் முன்னிலையில் தொடங்கியது. நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் தொடங்கியது. அதனை அஸீஸா ளுஹா ஸயீத் ஓதினார். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை அஸீஸா பாஸ்மா கதீர் அவர்களும், உருது மொழிபெயர்ப்பை அஸீஸா நிதா சல்மான் அவர்களும் வாசித்தனர்.

இதன் பிறகு, அஸீஸா ஸவ்பானா கனுால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீஸை எடுத்துரைத்தார்:

ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். மிகப் பெரிய பாவத்தைப் பற்றி நான் உங்களுக்குக் கூறட்டுமா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ‘ஆம்! ஹுஸூர்! நிச்சயமாகக் கூறுங்கள் என்று நாங்கள் கூறினோம். அதற்கு,‘அல்லாஹ்வுக்கு இணை வைத்தல் மற்றும் பெற்றோருக்கு மாறு செய்தல் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு தலையணையில் சாய்ந்து அமர்ந்திருந்தார்கள். உடனே நிமிர்ந்து உட்கார்ந்து, மிக உரத்த குரலில் கூறினார்கள்: ‘கவனியுங்கள்! மூன்றாவது பெரும் பாவம் பொய் பேசுவதும், பொய் சாட்சியம் வழங்குதலும் ஆகும். இந்த வார்த்தையை அன்னார் (ஸல்) எந்த அளவு திரும்பத் திரும்பக் கூறினார்கள் என்றால், ஹுஸூர் (ஸல்) அமைதியாகி விட வேண்டுமே! என்று நாங்கள் விரும்பினோம். (புகாரி கிதாபுல் அதப், பாபு ஹுகூக்கில் வாலிதைன்)

இந்த ஹதீஸின் ஆங்கில மொழிபெயர்ப்பை அஸீஸா அலீனா அஹ்மது சமர்ப்பித்தார். அதன் பிறகு, அஸீஸா ஃபாயிஸா கலீம் அவர்கள், ஓ பேஷ்வா ஹமாரா ஜிஸ் ஸே ஹே நூர் ஸாரா என்று தொடங்கும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவிதை வரிகளை இனிய குரலில் பாடினார்:

ஹுஸூர் அன்வர் அவர்கள் பொறுப்பாளர்களுக்கு கவனமூட்டியவாறு கூறினார்கள்: நிகழ்ச்சியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மல்ஃபூஸாத் இடம் பெறவில்லை; மல்ஃபூஸாத் வாசிக்கப்படுவதற்கு தயாரிப்பு செய்யப்படவில்லை ; ஆண் பிள்ளைகளுக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டதிருந்ததோ அதே நேரம் தான் உங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர்கள் அதனை செய்திருந்தார்கள். நீங்களும் செய்திருக்கலாமே?

### கேள்வி - பதில் மற்றும் வழிகாட்டுதல்கள்

கேள்வி: ஒரு வாகிஃபா நவ் மாணவி கூறினார்: நான் காமர்ஸ் படித்து வருகிறேன். எனது நிகழ்ச்சி Human Resources Management பற்றியதாகும். இதன் பிறகு அடுத்து நான் என்ன செய்வது?

பதில்: ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: வக்ஃப் செய்ய வேண்டும். நீங்கள் ஆஸ்திரேலியாவை விட்டுவிட்டுச் சென்று விடுவீர்களா? அதற்கு, அந்த மாணவி: ‘எங்கு செல்வதற்கு ஹுஸூர் கூறுவீர்களோ அங்கு நாங்கள் சென்று விடுவோம் என்று பதிலளித்தார்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ‘கவிதைகளில் செல்வீர்களா? அல்லது உண்மையில் செல்வீர்களா? கவிதைகளிலோ நாங்கள் இதை செய்து விடுவோம்; அதை செய்து விடுவோம் என்று நிறையப் பாடல் படுகின்றீர்கள்.

பின்னர் ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ஆகட்டும்! எழுதி அனுப்புங்கள், பிறகு என்ன செய்வது? என்று கூறுகிறேன்.

கேள்வி: ‘ஹுஸூர்! தங்களுக்கு ஒரு மகள் இருந்து அவர் வக்ஃபே நவ் ஆக இருந்தால், பின்னர் அவர் எந்த ஃபீல்டில் செல்ல வேண்டும் என்று தாங்கள் விரும்புவீர்கள்? என ஒரு சிறுமி கேட்டார்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ‘அல்லாஹ்வின் அருளால் எனக்கு மகளும் இருக்கின்றார்; ஆனால், அந்த நேரத்தில் வக்ஃபே நவ் திட்டம் இருக்கவில்லை. எனவே அவர் வக்ஃபே நவ் திட்டத்தில் இடம் பெறவில்லை. அவருக்கு நான் எதனை விரும்பியிருப்பேன்? என்று கேட்கின்றீர்கள்; அதற்கான பதில் என்னவென்றால், வக்ஃபே நவ் என்றால் என்ன? என்பது பற்றி நான் அவருக்கு சரியான தர்பிய்யத் வழங்கியிருப்பேன். ஆக, தான் எப்படி சிறந்த முறையில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய முடியும்? என்பதை அவர் சுயமே தமக்கு விரும்பியிருக்க வேண்டும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: மற்றபடி பெண் பிள்ளைகளுக்கு 6-7 பாடப் பிரிவுகளைக் கூறியுள்ளேன்; அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். கற்பித்தல் நல்ல துறையாகும். மருத்துவம் நல்ல துறையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரண்டு பெரும் கல்வி சிறந்ததாகும். இல்முல் அத்யான், மற்றும் இல்முல் அஜ்ஸாம் ஆகும். ஒன்று மார்க்கக் கல்வி மற்றொன்று மருத்துவக் கல்வியாகும். எனவே மெடிசின் துறையில் செல்லலாம். பின்னர் Linguist பெண்கள் சிறந்தவர்களாக ஆக முடியும். மொழிகளைக் கற்றுக் கொள்ளுங்கள்; மேலும் நூல்களை மொழிபெயர்ப்பு செய்யுங்கள். அடுத்து, சில பெண்கள் ஆராய்ச்சித் துறையிலும் செல்கிறார்கள். Archaeology துறையிலும் சென்றுள்ளனர். எனவே ஒன்று, மார்க்கக் கல்வியை கற்றுக் கொள்ளுங்கள்; மேலும் மார்க்கக் கல்வியை பிறருக்கும் கற்றுக் கொடுங்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: எந்தத் துறையில் செல்ல வேண்டும்? எதில் ஆர்வம் உள்ளது? என்பது ஒவ்வொருவருக்கும் அவரவருக்கான தேர்வு ஆகும். எவ்வளவு ஃபீரி ஹேன்ட் கிடைக்கிறதோ நாம் வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கு வழங்குகிறோம். எந்த நிர்பந்தமும் இல்லை. ஒருபோதும், எவர் மீதும் எந்த நிர்பந்தமும் செய்யப்படுவதில்லை. எனவே இந்த 6-7 பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.அதில் உங்களுக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். எந்தத் துறையில் செல்ல விரும்புகிறீர்களோ செல்லுங்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள் : ‘என் வகுப்புகளின் அறிக்கைகளைப் படியுங்கள், கேளுங்கள்; மேலும் பல்வேறு நாடுகளின் வகுப்புகளின் அறிக்கைகள் வெளியாகின்றன. அவற்றை படியுங்கள் அல்லது MTA- வில் பாருங்கள். அவ்வாறு செய்தால் ஒவ்வொருவருக்கும் தெரிய வரும். உங்களை நீங்கள் MTA- உடன் இணைத்துக் கொள்ளுங்கள். கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தனித்தனியாக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவற்றையும் பாருங்கள்; கண்டிப்பாக கேட்டு வாருங்கள். எனது குத்பாக்களையும் நீங்கள் அனைவரும் நிச்சயமாகக் கேட்க வேண்டும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஏப்ரல் மாதத்தில் நான் ’வக்ஃபே நவ்’ பற்றி ஒரு குத்பா வழங்கியுள்ளேன் என்று கருதுகிறேன். அதைப் பாருங்கள். படியுங்கள். அதேபோல, இந்த ஆண்டும், கடந்த ஆண்டும் நான் யூ.கேவில் வக்ஃபே நவ் இஜ்திமாவில் வழங்கிய உரைகள் உள்ளன; அவற்றை படியுங்கள். அந்த இரண்டு உரைகளும் ஆங்கிலத்தில் இருந்தன.

ஒரு வாக்ஃபே நவ் மாணவி கூறினார்: நான் பாகிஸ்தானில் B.A. முடித்துள்ளேன். அப்போது, ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: வரலாறு மற்றும் இஸ்லாமிய பாடங்களாக இருந்திருக்கும். மேலும் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருக்கிறது. அதற்கு, ‘ஆம்! அப்படித்தான் இருக்கிறது‘ என்று அந்த மாணவி கூறினார்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ‘எனது அறிவுக்கு எட்டியவரை அப்படித்தான். எனவே டிகிரி படிக்கவில்லை என்று யாரும் கூறாமல் இருக்க B.A. படியுங்கள். ஆயினும், சிந்தித்து, புரிந்து ஒரு பாடத்தை, ஒரு துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தற்போது நீங்கள் இங்கு வந்துவிட்டீர்கள். எனவே ஆங்கிலப்

**இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்**

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230
All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad